சித்தாந்தம்

V 3 No. 8

Aug 1930.

3L
R673ஈ2", N28
N30.3.8
18, 145

973

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 8.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

21 AUG 1930

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள்<br>1930ஆ ஆகஸ்டு௴ | இதழ் ௮ |
|---|---|---|

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| சமய வளர்ச்சியும் சட்டசபையும் ... | ... ௧௬௧ |
| சிவஞானபோத விளக்கம் ... | ... ௧௬௫ |
| கோகழி ... ... ... | ... ௧௭௧ |
| கோகழி ... ... ... | ... ௧௭௨ |
| கிறித்து சமயம் ... ... | ... ௧௭௫ |
| ஒழுக்கம் ... ... ... | ... ௧௭௬ |
| பதினொராந் திருமுறை ... ... | ... ௧௮0 |
| திருச்செந்தூர் சிவசுப்பிரமணிய வித்தியாசாலை : பிரவேசச் சிறப்பு ... ... | ... ௧௮௧ |
| நம் சமாஜத்தின் அரிய தொண்டுகள் ... | ... ௧௮௪ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்
சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரு. 1-8-0. 1930 .வெளி நாட்டுக்கு ரு. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

# மதிப்புரைகள்

**தமிழ் இலக்கிய வரலாறு :—** ஆசிரியர் திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ. எம். எல். மணிவாசக மன்றம், திருநெல்வேலி. விலை ரூபா 2½. பக்கம் ௩௫௦. இது புதியமுறையில் எழுதப்பட்ட ஒரு மிக அரிய ஆராய்ச்சி நூல். இற்றைக்குப் பல இலக்கிய வரலாறுகள் வெளியிடப்பட்டிருக்கும் சரித்திர உணர்ச்சியோடும் மேல் நாட்டு அறிவியலுணர்ச்சியோடும் எழுதப்பட்ட வரலாறு இஃதொன்றே எனக் கூறுதல் மிகையாகாது. இந்நூலின்கண் ஒவ்வொரு நூல் அல்லது ஆசிரியரின் காலம் இதுவரை வெளிவந்துள்ள எல்லாச் சான்றுகளையும் நுருவியாராய்ந்தே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தலைச் சங்கந்தொட்டு தற்போது உயிரோடிலங்கும் ஆசிரியர்களின் வரலாறுள்ளிட்ட எல்லா விவரங்களையும் இந்நூலிற் காணலாம். "மூவேந்தரது கொடி வழி" யென்ற நான்காம் அதிகாரம்மட்டும் ௪௦௦ பக்கங்கொண்டு மிக விரிவாகத் திகழ்கின்றது. இந்நூலை ஒரு வரலாற்றுக் களஞ்சியம் எனல் மிகையாகாது. ஒவ்வொரு தமிழ் மகனும் தவறாமல் வாங்கிப் பன்முறை பயில்வது இன்றியமையாதது. வேண்டுவோர் ஆசிரியருக்கெழுதுக.

**வள்ளுவரும் மகளிரும் :—** இந்நூல் திரு. தெ. பொ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை எம். ஏ. பி. எல். அவர்கள் இயற்றியது. ௧௮ பக்கங்களை யுடையது. விலை ரூபா ஒன்று. திருவள்ளுவனர் பெண் மக்களை அடிமைகளாகவும் கேவலப் பொருள்களாகவும் கருதினர் என்று சுயமரியாதை இயக்கத்தினர் கூறிய "அறிவுரை"யை ஆராய்ந்து, அவ்வுரை முழுப்பொய் என்பதை நிலைநாட்டித் திருக்குறளில் பெண்களுக்களித்துள்ள உயர்வு முதலியவற்றைத் திருக்குறள் துணைகொண்டும், ஏனைய சங்க நூல்களின் மேற்கோள்களைக் கொண்டும் இந்நூல் விரிவாக விளக்குகின்றது. திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரியற்றிய "பெண்ணின் பெருமை" எனும் நூலின் பக்கலில் விளங்கும் சிறப்புடையது. வேண்டுவோர் சென்னை, பார்க்டவுன் ஸ்ரீ சாரதாத்தின சற்குரு புத்தகசாலைக் கெழுதுக.

**உடல் நலன் :—** ஆசிரியர் ஆவி. சித. சொக்கலிங்க செட்டியார், வலம்புரி, பொன்னமராவதி போஸ்டு. இது ௬௪ பக்கங்கொண்ட அரியதொரு கட்டுரை. தூயகாற்று, நீராடல், நல்ல தண்ணீர், தூயஉடை, எளிய உணவு முதலியவற்றின் சிறப்பையும், குறித்த காலங்களில் விரதம் இருந்து உண்டி சுருக்குதல் முதலிய பண்டை முறைகளின் பெருமையையும் இந்நூல் பாராட்டுவது நோக்கத்தக்கது. வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதுக.

**திருமறைப் பாராயணத் திரட்டு :—** தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள், தாயுமானவர், அருணகிரியார், இராமலிங்க அடிகள் பாடல்கள் இவைகளினின்றும் அனைமணி நேரத்தில் அனுதினமும் பாராயணம் செய்தற்குரிய 22 அரிய பாடல்களை மெய்ஞ்ஞான வழியர் அருளானந்தனர் திரட்டியுள்ளார். ஒரு பிரதியின் விலை அணு ஒன்று. ரூபா ஒன்றுக்கு இருபதுபிரதி. அறிவானந்த நிலையம், வில்லிப்பாக்கம், குணம்பேடு போஸ்டு என்ற விலாசத்துக்கு எழுதுக.

---

## சித்தாந்த நூற்பதிப்பு நிதியின் வரவு செலவுக் கணக்கு

| வரவு | | | | செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உண்டியல் வரவு | 18 | 14 | 9 | விண்ணப்பம் அச்சுக்கூலி | 1 | 13 | 0 |
| கோட்டையூர் வே.நா. இலக்குமண செட்டியார் | 10 | 0 | 0 | தகர உண்டியல் | 0 | 5 | 6 |
| ஆ | 28 | 14 | 9 | | 2 | 2 | 6 |

இருப்பு ரூபா 26—12—3.

### கையொப்ப மிட்டிருக்கும் பெரியார்கள் :—

| | ரூ. | அ. |
|---|---|---|
| N. S. M. T. முத்தைய செட்டியார், தேவகோட்டை ... ... | 10 | 0 |
| D. V. முத்தைய செட்டியார் எழுவன் கோட்டையர்களின் பழவீடு, தேவகோட்டை | 10 | 0 |
| லெ. பழனியப்ப செட்டியார் அரு. லெ. வீடு. தேவகோட்டை ... | 6 | 0 |
| பலவான்குடி வெகேசன் இராமசாமி செட்டியார். ... ... | 20 | 0 |
| பலவான்குடி வெ. சு. முத்துவள்ளியப்ப செட்டியார் ... ... | 10 | 0 |
| நொத்தமங்கலம் தெ. பழ. சித. சதாசிவ செட்டியார் ... ... | 10 | 0 |
| மொத்தம் | 66 | 0 |

21 AUG 1930

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள் 1930 ௵ ஆகஸ்டு | இதழ் ௮ |
|---|---|---|

## சமயவளர்ச்சியும் சட்டசபையும்

[பத்திராசிரியர்]

தமிழ் நாடெங்கணும் சட்டசபைத் தேர்தலின் கூக்குரல் முழங்குகின்றது. அரசியல் கட்சியினர் பலர் தங்கள் கொள்கைகளை விரிவாக விளக்கி, தங்களுக்கே வாக்குரிமை யளிக்க வேண்டுமென்று வீடுதோறும் சென்று மன்றாடுகின்றனர். இத்தருவாயில் தமிழ்மக்கள் முதற்கடன் யாதென்பதை விளக்க வேண்டியது அவசியமாகும்.

இதுவரை சட்ட சபையின் ஆதரவைக் கொண்டு யாது செய்தனர் என்றும் இனி வருந் தேர்தலில் வெற்றி பெற்றால் உத்தியோகம் வகித்து என்னென்ன செய்யக்கூடும் என்றும் விரிவாகப் பறையறைவிக்கும் பல கட்சியினர், சமயப் பாதுகாப்பு, சமய வளர்ச்சி என்ற துறைகளில் தாங்கள் யாது செய்துள்ளனர் என்றாவது யாது செய்யப் போகிறார்கள் என்றாவது விளக்காது விடுத்தது நோக்கத் தக்கது. இதிலிருந்து இக்கட்சியினரெல்லாம் சமயப் பற்று ஒரு சிறிதும் இல்லாதவர்களென்றும் சமய வளர்ச்சியில் எள்ளளவும் ஊக்கம் அற்றவர்களென்றும் ஒருவாறு உணரலாம்.

வறுமை செறிந்துள்ள நமது நாட்டில் அரசாங்கத்தினர் உதவியும் கண்காணிப்பும் இல்லாத ஸ்தாபனங்களும் இயக்கங்களும் பெரும்பயன் விளைப்பது அரிதென்று அனைவரும் ஒப்புக் கொள்வர். ஆகவே அரசாங்கத்தில் முதன்மை வகிக்கும் சட்டசபை உறுப்பினர்கள் சமயத் துறையில் இறங்கி உழைத்தாலன்றி சமயம் தளர்ச்சி யடைவது இயற்கை. சைவம், வைணவம் முதலிய இந்து சமயப் பகுதிகளெல்லாம் தளர்ச்சியுற்றிருப்ப

தற்குச் சட்ட சபையிலுள்ள இந்து உறுப்பினர்களின் ஊக்கக் குறைவே காரணமாகும். அவ்வாறே முஸ்லீம், கிறிஸ்தவ உறுப்பினர்களின் ஊக்க மிகுதியும் சமயப் பற்றும் அச்சமயங்கள் நம் நாட்டில் பாவி வருதற்குக் காரணமாகும். மேற்கூறிய பொருள்களை ஒப்பிட்டு ஆழ்ந்து நோக்குவது ஒவ்வோர் இந்து சமயத்தவன் கடமையாகும்.

சட்டசபை உறுப்பினர்கள் குடிகளைத் தேடி வருகின்ற காலம் இதுவே. தேர்தல் முடிந்துவிட்டால் அவ்வுறுப்பினர்கள் பதவிவேட்டை, பட்டவேட்டை முதலிய அரும் பணிகளிலேயே தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்துவ ரென்பது நந்தமிழ் நாட்டினர் சென்ற பத்து ஆண்டுகளாகக் கண்டதொரு காட்சி. ஆகையால் குடிகளைத் தேடி சட்டசபையினர் வருகின்ற இக்காலத்தில் குடிகள் தங்கள் குறைகளைச் சொல்லி, “அவைகளை நீக்குவதற்காக வேண்டிய வேலைகளைச்செய்து கொடுப்பீர்களா?” என்று சட்டசபைக்குச் செல்ல விரும்புவோரைக் கேட்கவேண்டும். கடவுள்மீது ஆணைவைத்து அவர்களிடம் உறுதிமொழி பெறவேண்டும்.

குடிகள் குறைகளைச் சொல்வது இயல்பு. சட்டசபை அபேக்ஷகர்கள் நேராக அவைகளைக் கேட்பது கூட கிடையாது. ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது ஒவ்வொரு தெருவிலுமுள்ள பிரபலமான பணக்காரரென்று பெயர் படைத்த ஒரு முதலியார், ஒரு ரெட்டியார், ஒரு நாயடு, ஒரு செட்டியார், ஒரு பிள்ளை, அல்லது ஒரு ஐயரைப் பிடித்துக்கொண்டு அவரை முன்னே தள்ளிவிட்டு,வருகின்றவர் தனக்கு நிரம்பவும் [illegible]ம் அவர் தேர்தலில் வெற்றி பெற்றால் உடனே எல்லா வரிகளையும் குறைத்து ரோட்டு முதலிய சௌகரியங்களை யெல்லாம் அதிகாரிகளுக்குப் பக்குவமாகச் சொல்லி செய்து கொடுப்பாரென்றும் அப்பிரபலஸ்தர் சிபார்சுகள் செய்ய வருகின்ற அபேக்ஷகருக்கே வக்களிப்பதாக அந்தகிராமத்தினர் அல்லது தெருவினர் கூறுவது தேர்தல் காலத்தில் நடக்கும் வழக்கமே. அவ்வாறு ஏமாற்றித் தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் ஒருவரேனும் வரிகளைக்குறைக்கவாவது மற்றச் சௌகரியங்களைத் தரவாது செய்யா தொழிந்ததும் வழக்கமாய் விட்டது.

ஆகவே இத்தகைய பொய்ம்மொழிகளைக் கேட்டு இனியாவது ஏமாறுது எச்சரிக்கையாயிருப்பது நமது தமிழ் மக்கள் உறங்காது விழித்திருப்பதைக் காட்டுவதாகும்.

வரியும் இறையும் ரோட்டும் விளக்கும் எங்ஙனம் ஆயினும் ஆகுக. எல்லாவற்றினும் சிறந்தது ஒவ்வொருவனும் பிறந்த சமயம். நமது நாட்டுக்கு அன்றும் இன்றும் என்றும் சிறப்பைத் தருவது நமது சமயமேயாகும். கிரேக்கர், ரோமனியர் முதலிய எத்துணை நாகரிகங்க ளெல்லாம் சமயம் குன்றிய காரணத்தால் ஒழிந்து போயின. நமது தமிழ் நாகரிகம் மிகப் பழைய காலந்தொட்டு நாளதுவரை சிறப்பாக உலகத்தவரால் போற்றப்பட்டு வருகிறதென்றும் தமிழர் சமயமும் கோயில்களும் மேல்நாட்டுப் பேரறிஞர்களால் கொண்டாடப் பட்டுள்ளன வென்றும் நாம் உணர்ந்திருக்கிறோம். இவைகளைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமையல்லவா? இவைகளைச் செவ்வனே பாதுகாக்க அரசாங்கத்தாரை

187145



நமது சட்டசபையிலுள்ள இந்து உறுப்பினர்கள் தானே வற்புறுத்த வேண்டும்? அவர்கள் தங்கள் பதவி வேட்டை பட்ட வேட்டைகளிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்துவிட்டால் நாம் எவ்வளவுதான் உழைத்தும் என்ன பயன் காணமுடியும்?

ஆகையால் இத்தமிழ் நாட்டினருள் வாக்குரிமையுடைய இந்து சகோதரர்கள் செய்யவேண்டியது யாதெனில் முதலியார், ரெட்டியார், செட்டியார் முதலிய பிரபலஸ்தர்களின் சிபார்சைக் கேட்டு ஏமாற்றமடைந்தது போதும் என்று மனேதிடம் செய்துகொண்டு தங்களைக் காணவரும் அபேக்ஷகர் ஒவ்வொருவரையும் சமய வளர்ச்சிக்காகத் தாம் என்ன செய்தார், செய்கிறார், செய்யப் போகிறார் என்பவைகளைச் செவ்வையாக விசாரித்து உறுதிமொழி வாங்குவதோடு சமய வளர்ச்சிக்காகத் தங்கள் கிராமம் அல்லது தெருவில் ஒரு சபை வைத்து அதற்குப் பொருளுதவியும் அத்தருணமே புரியவேண்டுமென்று வற்புறுத்தவேண்டும். இவைகட்கு இணங்காதவர்களைப் புறக்கணிப்பதோடு அவர்களுடைய ஊக்கமின்மையைப் பலரும் அறிய விளம்பரம் செய்யவேண்டும்.

நமது பத்திரிகையும் நமக்குத் துணை நின்ற பல பத்திரிகைகளும் செய்த பிரசாரத்தின் பலனாக சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவராவது தாம் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் அதற்கே வெற்றி கிடைக்க வேண்டும் என்றும் விளம்பரம் செய்து கொண்டு வாக்குரிமை வேண்டு மென்று இதுவரை கேட்க முன்வராதது நோக்கத் தக்கது. அவ்வாறு கேட்டால் தாங்கள் கட்டாயம் தோல்வியடைவார்கள் என்ற உணர்ச்சி அவர்களைப் பிடர் பிடித்தாட்டுகின்றது. இதை நமது தமிழ் மக்கள் நன்கு கவனிக்க வேண்டும். ஒவ்வோர் அபேக்ஷகரையும் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றித் தாம் என்ன எண்ணுகிறார் என்பதை எழுதித் தரும்படி வற்புறுத்த வேண்டும்.

இவ்வழிகளி லெல்லாம் வரும் தேர்தலில் முழுவிழிப்பாக விருந்து நமது ஒப்பற்ற சமயத்துக்கு அரும்பணி செய்து பெரும் பேறடையுமாறு நமது தமிழ் மக்களை வேண்டிக் கொள்வதோடு அவர்கட்குத் துணை புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

---

# சிவஞானபோத விளக்கம்

[கி. குப்புச்சாமி முதலியார், உதவிப் பத்திராசிரியர்]

## இரண்டாம் சூத்திரம்

இச்சூத்திரம் ஒடுங்கும் உலகம் மீளவும் உளதாகும் விதம் இதுவென வகுத்துக் கூறுகின்றகாலத்தே துணைக் காரணம் முதலியன இல்லாதவிடத்து முழுமுதற் கடவுளாகிய இறைவன் உலகத்திற்கு நிமித்த காரணனாக இருப்பது எவ்விதம்? என்னும் வினவிற்கு விடைதருவதுபோல் அத்துணைக் காரணம் முதலியவற்றுக்குப் பிரமாணங் கூறுவதாகும். முதற்சூத்திரம் பதிக்குப் பிரமாணங் கூறுவது போல் இரண்டாஞ் சூத்திரம் பாசத்திற்குப்

பிரமாணங் கூறுவதால் அவ்வியைபு நோக்கி இங்கு வைத்தனர்.

" அவையே தானேயா யிருவினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்கமின்றி நிற்கு மன்றே"

(இ-ள்.) அவையே - அவ்வுயிர்களே, ஆய் - தானாகி, தானேயாய் - அவைகளுக்கு வேறாகி, அவையே தானேயாய்- அவ்வுயிர்களோடு உடனாகி, ஆணையில்- சிற்சத்தியின் தொழிலாகிய, இருவினையில் - நல்வினை தீவினையென்னும் இருவினையால், போக்கு வரவு புரிய - அவ்வுயிர்கள் இறத்தலையும் பிறத்தலையுஞ் செய்யும் வண்ணம், நீக்கமின்றி - அவ்வாணையென்னும் சிற்சத்தியின் பிரிப்பில்லாது, நிற்கும் - சங்கார காரணனாகிய முதற்கடவுள் நிற்பன் (எ-று.)

சங்கற்பத்தால் உலகத்தைச் சிருட்டிக்கின்ற இறைவன் நிமித்த காரணன் ஆதலால், அவனுக்குத் துணைக் காரணம் சிற்சத்தி யென்றும், அவனுக்குத் துணைக் காரணமாக இருப்பது இருவினை யென்றுங் கூறினர். இவ்விதங் கடந்த சூத்திரத்துள் 'மலத்துளதாம்' என ஆணவமலம் கூறியும், இங்கு 'இருவினையின்' என்பதால், கன்மமலமும் கூறி அதனால் மாயையின் தோற்றமும் கூறியதாயிற்று.

இச்சூத்திரம் நான்கு அதிகாரங்களாக வகுக்கப்பட்டு உள்ளது. அதில் முதல் அதிகாரம் சூத்திரத்தின் முதற் பகுப்பாகிய 'அவையே தானே யாய்' என்பது. அஃதாவது முதற் சூத்திரத்தில் குறித்த 'அவன் அவள் அது' வென்னும் ஆன்மாக்கள் எல்லாம் முதல்வன் தானேயாய் நிற்பன் என்பதாம்.

இவ்வாறு முதல்வன் ஒன்றாயிருப்பன் என்பது கேட்ட அபேத வாதியானவன் "பொன்னும் பணியும்போல் ஒன்றாய் இருப்பன் போலும்." என்று கூறலும், " அன்று அன்று ; உடலும் உயிரும்போலும் இருப்பன் ; அது கருதியே,

"கட்டு முறுப்புங் காணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென் [றாங்—கொட்டி
யவனுள மாகில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு"

என்று கூறினர். இச்செய்யுளின் பொருள் :

உயிரானது நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்ட உடம்பினையும், ஐம்பொறி முதலிய கருவிகளையும் கொண்டு நின்று தன் உடம்புக் கிட்ட பெயரால் ஒருவ ரழைத்தவிடத்துத் தான் இதோ வந்தேன் என்று வருதலைக் காண்கின்றோ மல்லவோ ; அது எவ்விதம் உடம்பிற்கு இட்ட பெயர் தனக் கென்று கொண்டு ஒருவித வேறுபாடு மில்லாமல் நிற்கின்றதோ அதுபோல் இறைவனும் உயிர்களோடு ஒட்டி நிற்கின்றான். அவ்வாறு நின்றாயினும், எவ்விதம் உடம்பு உயிராகாதோ, அதுபோல் உயிர் இறைவனாகாது. உயிரும் உடம்பும் எவ்வாறு கலப்பால் ஒன்றாகக் காணப்பட்டாலும் வேறாக உள்ளனவோ, அதுபோல் உயிர்க்குள் உயிராய் இறைவன் இருப்பினும் உயிர் உயிரே ; முதல்வன் முதல்வனே யாவன் என்பதாம்.

அதுகேட்ட ஏகான்மவாதி வேதத்தில் அத்துவித மென்று கூறியது மாத்திர மல்லாமல் ஏகமென்றும் கூறியதால் அதற்கு வேறுபாடாய் இறைவன் உயிர்களோடு கூடிநிற்பான் என்று பேதப்படக் கூறி நிற்பது எதற்கோ என்னலும், அதற்கே,

"ஒன்றென்ற தொன்றே காணொன்றே பதி [பசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா— [ணென்றின்று
லக்கரங்க ளின்றா மகரவுயி ரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு"

என்று கூறியது. அதாவது அறிஞனே ! வேதம் ஒன்று என்று கூறியதற்குப் பொருள் ஒன்று என்பது தான். அதற்கு வேறு பொருள் கூறுவது கூடாது. அதன் தாத்பரியம் பதிப்பொருள் ஒன்று தான்; இரண்டு இல்லை என்று கூறுவதேயன்றி நீ கூறுவதுபோல் ஏகான்மவாதமல்ல. இதையறியாது ஒன்று என்று சொல்லுகின்ற நீ அம்முழுமுதற் கடவுளின் வேறாகி நிற்கின்ற பசுவென்று அறிவாயாக. ஆனால் நீயும் அவனும் கலந்து நின்றும் வேறாயிருக்கின்ற தன்மை கண்ணிற்கும் சூரியனுக்கு முள்ள ஒற்றுமையும் வேற்றுமையும் எவ்விதமோ அவ்விதம் என்று அறிவாயாக. 'நீர் கூறுகின்ற பதியும் அறிவுடைப் பொருளாக இருக்க, நானும் அறிவுடைப் பொருளாயிருக்க என்னைப் பாசத்தோடு பந்திக்கப்பட்ட பசுவென்று அழைத்தல் தகுதியோ' வென்னில், நீ மலத்தோடு கட்டுப்பட்டு நிற்கின்றாய். ஆகையால் பசுவென்று உன்னையழைத்தேன். ஆனால் இவ்வாறு உயிர்களுக்கும் இறைவனுக்கும் வேற்றுமை கூறுகின்றவிடத்து, பிரமமென்னும்பொருள் இல்லையாயின் ஒரு பொருளும் இல்லை என்ற கூறுகின்ற வேதத்திற்குப் பொருளென்னை என்று நீ கேட்டல் கூடும். அதற்குப் பிரமாணம் அகரம் என்கின்ற உயிரெழுத்து இல்லையாயின் வேறு எழுத்*துக்கள் இல்லை என்று முதன்மைத் தன்மையால் கூறுவதுபோல் கூறியதாகும். அகரம் என்கின்ற முதல் எழுத்தும் அதுவல்லாத ஏனைய எழுத்துக்களும் இருப்பனபோல் முதல்வனாகிய இறைவனும் அவனால் அசைக்கப்படுகின்ற உயிர்களும் வேறு வேறு பொருள்களாக உள்ளன. ஆனால் வேதத்துள் பிரமம், அத்துவிதம் என்று கூறுங்காலத்து இருபொருள் என்பது எவ்விதம் என்று கேட்கின்றாய். இது கருதியன்றோ,

"பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும் போலெங்குமா—மண் [ணாரு
ளத்துவித மாதலரு மறைகளொன் றென்னா
தத்துவித மென்றறையு மாங்கு"

என்னுஞ் செய்யுளைக் கூறினர். அதாவது, பண்ணும் அதனுடைய இசையும் வேறாகவிருந்தும் ஒன்றென்று எண்ணப்படுவது போலவும், பழமும் அதன் சுவையும் வேறாக விருந்தும் வேறல்லாததாய் எண்ணப் படுவது போலவும், ஆண்டவன் வியாபகமாயும், உயிர்கள் வியாப்பியமாயும் அடங்கி ஒன்றுபோல் காணப்படுவதாம் என்பது. அதுவேயு மன்றிப் பல உவமை எடுத்துக் காட்டாது மூன்று தன்மையினையும் ஒன்றாக விளக்குவான் பொருட்டு,

"அரக்கொடு சேர்த்தி யணைத்த வக்கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின் [றித்
தானே யுலகாந் தமியேனுளம் புகுதல்
யானே யுலகென்ப னின்று"

என்னும் வெண்பாவைக் கூறினர். இதன் பொருளாவது கம்மிய னொருவன் அரக்கினை யுருக்கி அவ்வரக்கோடு சேர்த்து அணைத்த நவமணிகளி லொன்றை அவ்வரக்கோடு கூடி அரக்

னென்றும் கல்லென்றும் வேறுபாடு தோன்றாது நிற்பதுபோல் முதல்வனாகிய இறைவனும் இவ்வுயிர்களோடு கூடி நிற்றலால் பார்ப்பவை யெல்லாம் தானாயும், தானே உலகமாயும் நிற்பன் என்று கூறியதாயிற்று.

இம்முதல் அதிகரணத்தால் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இறைவன் நிற்கின்றான் என்பதுஅறிந்ததாயிற்று. அன்றியும்,அபேதவாதிகளையும்,பேதவாதிகளையும் பேதாபேத வாதிகளையும் மறுத்து உவமை வாயிலால்பொன்னும் பணியும்போல் அபேதமல்லை; உடலில் உயிர்போல் நிற்கின்றான். இருளும் ஒளியும்போல் பேதமல்லை; சூரியனும் கண்ணும்போல் இருக்கின்றான். சொல்லும் பொருளும்போல் பேதா பேதமல்லை; கண்ணொளியும் ஆன்ம போதமும்போல் இருக்கின்றான் என்று மூன்று வாதிகளுக்கும் பதில் கூறியதாயிற்று.

ஆயின் இரண்டாம் அதிகரணத்தில் இருவினை என்பதை வைத்துப் பேசினீர்கள். இருவினைக்கும் முதல்வனுக்கும் என்ன சம்பந்தம் என்று வாதி கேட்டலும், மேல் ஆன்மா வேறு என்று உணர்ந்த அறிஞனே! வேறாகிய இவ்வான்மாக்களுக்கு நல்வினை தீவினை யென்கின்ற இவ்விரண்டு வினைகள் முதல்வன் ஆணையென்கிற துணைக்காரணத்தினால் உண்டாகுமேயன்றி வேறில்லை என்றனர். ஆயின், உமது இறைவன் உலகத்து மக்கள் ஒரு காரியத்தைச்செய்யுங்கால் துணைக்காரணங் கொண்டு செய்வது போல் செய்பவனோ? அது அவனுக்கு இழுக்கன்றோ! என்று வாதி கூறுதலும், அறிஞனே! ஒரு நகரைக் காக்கின்ற அரசனொருவன் தன்னுடைய காவல் தன்மையை அதற்குத் தக்கவன் ஒருவனிடத்து வைத்துக் காவல் செய்வதுபோல் எல்லா அறிவும் முதன்மையும் அனுக்கிரகங்களும் உடைய அம்முதல்வன் ஒடுங்கிய உலகத்தை மீளவும் உண்டாக்குவதாகிய தனது ஆணையென்னுஞ் சிற்சத்தியை நல்வினை தீவினை யென்கின்ற அவ்விருவினைகளினிடத்து வைத்து நடத்துகின்றான் என்று அறிவாயாக. இது கருதி யன்றோ,

“உள்ளதே தோற்ற உயிரணைய மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே
—வள்ளலவன்
செய்பவர் செய்திப்பயன் விளைக்குஞ்
[செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று”

என்று கூறினர். இச்செய்யுள், வினையென்பது ஒன்று உண்டு என்பதற்கும், அவ்வினையே உயிர்க்குப் பயனாய் வரும் என்பதற்கும், வினை ஏறும் விதத்திற்கும், அது முதல்வனாகிய இறைவனை யில்லாமல் அமையாது என்பதற்கும் பிரமாணங் கூறுதற்கு எழுந்ததாயிற்று. இதன் பொருளாவது: முன்னரே உள்ளதாய் புண்ணிய பாவமென்கின்ற இருவினையே அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களையும், அவ்வின்ப துன்பங்களை யனுபவிப்பதற்கு இடமாகிய உடம்பினையும் உண்டுபண்ண, அழிப்புக்காலத்து இளைப்பாறி நின்ற உயிரானது புதிதாகத் தோன்றிய அவ்வுடலில்சென்றுஅடையும். உடலே அனுபவித்தல் கூடாதோ? உயிர் எதற்கோ வென்னில் சடமாகிய உடலிற்கு அது கூடாது. ஆகையால் சித்தாகிய உயிர் அவ்வுடலில் சென்று இன்ப துன்பங்களை யனுபவிக்கும். ஆனால் முன்னர் அநுபவித்த தன்மையால் வினை யொழிந்து போதல் கூடு



மன்றோ; மேலும் உளதாவது எவ்விதம் என்னில், மேல் வினையை யனுபவித்த காலத்து அனுபவித்த முறையினிடத்தே மறு பிறப்பிற்கு வினையுண்டாவதாகும். ஆயின் இவ்விதம் வினை வருவதற்கும் உயிர் அனுபவிப்பதற்கும் வினைக்கும் உயிர்க்கும் சம்பந்தமேயன்றி இறைவனுக்கு என்ன சம்பந்தம் என்னில் உழவன் ஒருவன் உழவு செய்ததன் பயனை நிலம் கொடுப்பதேயன்றி அவன் செய்த தொழில் கொடுப்பதில்லை. அதுபோல இறைவனும் உண்ணும் பொருளும் அதன் வினையும் ஆன்மாவோடு வருகின்ற அவ்விரு வினைகளை முதல்வனாகிய இறைவனே உயிர்களுக்குக் கூட்டுவன் என்பதாம்.

ஆயின் இருவினைதான் சடப்பொருள்; அவையே சென்று உயிரை அடையா; ஆனால் உயிர்களோ சேதனமாயிற்றே? அவ்விதம் சேதனமாயுள்ள அவ்வுயிர்கள் அவற்றினுடைய பயனை அறிந்து எடுத்துக் கொண்டு அநுபவியாவோ? உங்கள் வள்ளல் என்கின்ற இறைவன் எதற்கு? என்று வாதி கூறுதலும், அதற்கு விடையாக,

“அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர்
[தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்தபசா சம்போ—லவ்
[வினையைப்
போம லூட்டும் பிரானி னுகாரோ
லார்தா மறிந்தணைப்பா ராங்கு”

என்று கூறினர். இதன் பொருளாவது, உயிர் சித்தென்று நீ கூறுவது உண்மையே; ஆனால் அறிவுஞ் சுதந்திரமு மில்லாமல் ஆணவ மலத்தால் மறைப்புண்டு கிடக்கும் அந்த பெத்த காலத்துக் காந்தத்தை ஒருவன் கையிலெடுத்து இரும்புக்கு நேராகப் பிடித்து அதனோடு கூட்டுவது போல, ஒவ்வோர் உயிருஞ் செய்த வினையின் பயனைச் சிறிதும் மாறுபடாமல் ஆண்டவனே கூட்டி அநுபவிக்கச் செய்யா விட்டால் எவர்தாம் செய்வர்? ஆதலால் உயிர்கள் தத்தம் வினைப் பயனை யனுபவித்தற்கு ஆண்டவன் வேண்டும் என்பதாம்.

இது கேட்ட வாதியானவன், “நீர் கூறுகின்ற வினை யென்பது ஆதியோ அநாதியோ, ஆதியென்று கூறினால் நடுவில் தோன்றியதாயிற்று. முன்னில்லாதது நடுவே வாராது என்பது உமது சற்காரிய வாதமாதலால், அநாதியாக இருத்தல் வேண்டும். அநாதி யென்று கூறினால் எக்காலத்தும் உள்ள பொருளை ஒருவன் கூட்ட வேண்டுவதில்லை. ஆதலால் கூட்டுவதற்கு உங்கள் ஆண்டவன் எதற்கு” என்றான். அதற்குப் பதில் கூறுவார் போன்று,

“நெல்லிற் குமியு நிகழ்செம்பினிற் களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—
[வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்
ளலர்சோகஞ் செய்க மலத்தாம்” [வா

என்றருளினர். இதன் பொருளாவது, நெல்லினிடத்தே உமியும், செம்பினிடத்தே களிம்பும் எக்காலத்து உண்டாயின என்று ஆராய்ந்து பார்க்கின், அந்நெல்லுஞ் செம்பும் எப்போது உண்டாயினவோ, அப்போதே உமியும் களிம்பும் உள்ளனவென்று அறிகின்றோம். அது போலவே, ஆணவம் கன்மம் மாயை என்கின்ற மும்மலங்களும் உயிர்களிடத்து அநாதியே உள்ளனவாம். அவ்விதம் உள்ளனவற்றைக் கூட்டிப் பயன் நுகர்வது எவ்விதமென்னில்,

அலர்வதும் கூம்புவதுமாகிய தாமரைப் பூவொன்றினைச் சூரியன் ஆகாய வீதியில் தானிருந்து கொண்டே அலரச்செய்வதும், கூம்பச் செய்வதும் எவ்விதமோ அவ்விதமேயாம்.. ஆதலால் இவ்வதிகரணத்தால் இருவினையென்பது அநாதியென்றும் அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களை இறைவன் உயிர்களுக்குக் கூட்டுவிப்பன் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட வாதி, "இருவினை என்பதையறிந்தேன். ஆன்மாக்கள் மாறிமாறிப் பிறப்பானேன்? இறந்த உயிர் மறுபடியும் பிறப்பதில்லை. ஏனெனில் ஒரு குடம் உடைந்த விடத்து அக்குடத்திலிருந்த ஆகாயம் ஆகாயத்தோடு சேர்வது போல் ஒரு உயிர் உடம்பினீங்கிய விடத்து பிரமத்தோடு சேர்ந்து விடுதலால்?" என்றான். அதற்குப் பதில் கூறுவார், "ஓ வாதியே! ஆன்மா என்பது வேறுபொருள். தோன்றுதலும் முடிதலும் உள்பொருளுக்கே உண்டு என்பதனை நீ அறிய மாட்டாய். ஆன்மாவொன்று ஒடுங்கித்தோன்றுங் காலத்து அதன் தன்மை இதுவென்று உணர்த்துவேன்; கேட்பாயாக என்று,

"கண்ட கனவைக்
கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந் தத்துடு
வினையினாற்—கண்செவிகெட்
டுள்ளதே தோற்றவுள
மணுவாய்ச் சென்றுமனந்
தன்ன விழுங்கரு
விற்றான்"

என்று அருளினர். இதன் பொருளாவது, இவ்வுடம்பானது, கண் காது முதலிய உறுப்புக்கள் கெட்டு ஒழிந்த விடத்து, அதிலிருந்த உயிர் தோன்றிய படைப்புக் காலந் தொடங்கி மகா சங்கார காலம் வரையில் சூக்கும தேகத்தினிடத்திலேயும் தேவ சரீர முதலிய இடங்களிலேயும் இருந்து பயன்களையனுபவித்துப் பிறகு முன்னிருந்த உடம்பில் கடைசி காலத்தில் என்ன எண்ணந் தோன்றிற்றோ அவ்வெண்ணத்திற்குத் தக்கவிதமாகப் பல உருக்களில் வீழ்ந்து பிறக்கும் என்பதாம். இதனை,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்
செம்பொருள் காண்ப தறிவு" [பென்னுஞ்

என்னுங் குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய அடியிற்கண்ட விசேட வுரையாலும் அறியலாம். "உயிர் உடம்பினீங்குங் காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றுமென்பது எல்லா வாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற் பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிலலாய இதனின் மிக்க வுபாயமில்லை என்பதறிக." அதுவன்றியும், உலகத்துக் காட்சி யளவை யாகவே காணும் பாம்பு ஒன்று தன் தோலினையுரித்த காலத்துப் புதிதாக ஒரு தோலினைப் போர்த்துச் செல்லலை நாம் பார்க்கின்றோம். அன்றியும் புருடன் ஒருவன் தான் நனவோடு கூடிய உடம்பிலிருந்த காலத்து நனவோடு இருந்தும், அது நீங்கித் துயில் கொள்ளச் செல்லுங் காலத்து கனநிலைக்குரிய உடம்பில் செல்லுதலுங் காண்கின்றோமாதலால் உயிர்களும் இந்த நிலவுலகத்து உடம்பினை விட்டகாலத்து வினைக்குத் தக்க வளவாகப் பிறப்பினை யடையும் என்று கூறுகின்றவர்,

"அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேற
பரகாயம் போய்வரு மப்பண்பும்—பாவிற்



குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடா அன்னம் போமாறது"

என்று கூறினர். இவ்வதிகரணத்தால் உயிர்கள் வினைக்குத் தக்க வளவாகத் தேகங்களைக் கொண்டு மாறிப் பிறந்து வருமென்றும், ஆன்மாக்கள் நித்தியமென்றும் கண்டோம் என்றனர். இது கேட்ட வாதி, "இருக்கட்டும்; இனியேதோ சூத்திரத்துள் நீக்கமின்றி நிற்குமன்றே என்று கூறினீர். அதனால் இறைவன் உயிர்கள் பிறப்பதற்குத் துணைக்காரணமாயுள்ள சத்தியோடு நீங்குதலில்லாது இருப்பன் என்று பொருள் கண்டோம். அவ்விதங் கூறுவதால் உங்கள் இறைவனும் சத்தியும் வேறு வேறு பொருள்களோ அல்லது ஒரு பொருளோ" என்று கேட்டனன். எங்கள் இறைவன் ஒன்றென்றும் வேறென்றும் இரண்டு தன்மையு மில்லாமல் இரண்டினுக்கும் பொதுவாய் எங்கும் வியாபியாய் நிற்கின்றானதலால், "ஆணையின் நீக்கமின்றி நிற்குமன்றே" என்று கூறுவார்,

"எங்குமுள னென்றனவை யொன்றன் றிரண்டென்னி
லெங்கு முளனன்றெவற் றெவனு—மங்க
ணவையவ னன்றில்லைப் பொன்னொளி போ
னவையுடைமை யாளாள மங்கு" [லீச

என்றனர். இதன் பொருளாவது, "இறைவன் எங்கும் வியாபகன் ஆதலால் ஒன்றா யிருத்தல் கூடாது. இரண்டாய் நிற்பன் என்றால் வியாபகனாய் இருத்தல் கூடாது. வியாபி அல்லனென்றால் பசுக்களாகிய உயிர்களும், பாசங்களாகிய மலங்களும் அவனையின்றி யமைதல் கூடாது. ஆகலான், இறைவன் ஒருவனே சூரியனும், அவன் ஒளியும் போல சிவமுஞ் சத்தியுமென்று இருதிறப்பட்டுச் சர்வவியாபியாய் நிற்கும் விதம் என்று அறிதல் வேண்டுமென்றும், அது எவ்விதமோ எனின், சூரியன் ஒருவனே தன்னை மக்கள் பார்க்கும்படி ஆகாயத்தில் விளங்குவதும், தன் கிரணஞ் சென்றவிடங்களிலுள்ள பொருள்களை விளக்குவதும் ஆகிய தொழில்களைச் செய்யுங் காலத்து, பொருள்களை விளக்குகின்ற காலத்துக் கதிர் என்றும், தன்னை விளக்குகின்ற காலத்துக் கதிரோன் என்றும், இருதிறப்பட்டு நிற்பதுபோல், புறப் பொருளை நோக்கி நிற்கின்ற காலத்து, சத்தி என்ற பெயருடனும், அறிவு மாத்திரையாய் நின்ற காலத்துச் சிவம் என்னும் பெயருடனும் இறைவன் நிற்பான். ஆதலால் அவ்விறைவன் ஏகனென்றும் கூறுதற்கில்லாது அநேகனென்றுங் கூறுதற்கில்லாது சர்வ வியாபியாய் இருப்பன். அது கருதியே "ஆணையின் நீக்கமின்றி நிற்கும்" என்பதாம்.

இச் சூத்திரத்தின் தொகைப் பொருளாவது, முதற் சூத்திரத்தில் "அந்தமாதி" என்று கூறிய இறைவன் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று கூறுகின்ற ஆன்மாக்களாகிய உலகத்தோடு அவை யெல்லாமாகி ஒன்றாய் இருந்தும், வேறாயிருந்தும், உடனாயிருந்தும் அவ்வுயிர்கள் நன்மை தீமையென்கின்ற இரண்டு வினைகளால் இறத்தல் பிறத்தல்களைச் செய்யவும், இவ்வாறு இறத்தல் பிறத்தல்களைச் செய்யத் தனக்குத் துணைக் காரணமாகவுள்ள ஆணையென்னுஞ் சிற்சத்தியோடு நீக்கமின்றி நின்றும் இருக்கின்றான் என்பது ஆயிற்று. அன்றியும், பாசத்திற்குப் பிரமாணங் கூறுகின்ற சூத்திரமாதலால் முதற் சூத்திரத்தில் மலத்தால் என்று கூறியதால் ஆணவமலம் ... ள், 'இரு



18×45

அலர்வது'என்பதனல் மாயா மலமும், மைப் ட மலமும் உண்டென்பதைச் வி தி த்துப் பாசம் உண்டென்பதற்குப் பிரமாணங் கூறியவாருயிற்று.

இரண்டாம் சூத்திரம் முடிந்தது.

குறிப்பு :—இவ்விரண்டாவது சூத்திரத்துக்குத் தெளிபொருள் விளக்கவுரை எழுத வந்த ஆசிரியர், "தனது காரியமாய உலகமனைத்தும் தானேயாயுள்ள (காரண கர்த்தாவாகிய) இறைவன் சீவர்கள் தமது கர்மங்களுக்கேற்றவாறு சுக துக்கங்களை யநுபவித்தற் பொருட்டு, அவற்றை அவர்தம் கர்மங் காரணமாகவே தனது நியம சக்தியினல் படைத்தளித் தழித்து வருகின்ருனெனல்" என்றும், "முன் சூத்திரம் இறைவன் உலகத்திற்கு அபின்ன நிமித்த வுபாதான காரணனுயிருக்கின்ருனென, 'அந்தமாதி' என்பதனல் கூறியதை இச்சூத்திரம், 'அவையே தானேயாய்' என்பதனல் வற்புறுத்திக் கூறினமையின், இறைவன் உலகத்திற்கு நிமித்த காரணனுக மாத்திர மிருக்கின்ருனென்று கூறுவாரது கூற்று மறுக்கப் பட்டவாறு காண்க" என்றும், "கடத்திற்கு நிமித்த காரணமாக மாத்திரமுள்ள குயவன் அக்கட வடிவமாக விருத்தல் கூடுமோ? அஃது அப்பிரசித்தமாமன்ருே? இறைவன் குயவன் போல உலகத்திற்கு நிமித்த காரணமாக மாத்திர மிருப்பானுயின், அவனவ்வுலக வடிவமாக விருத்தல் கூடுமோ? அஃது ஒருவாற்ருனுங் கூடாதன்ருே? இதனல் இறைவன் உலகத்திற்கு நிமித்த காரணமாக மாத்திர மிருக்கின்ருன்; அவ்வுலகமாயு மிருக்கின்ருனென்று கூறுவார் கூற்று, "எழுத்தறி வில்லான் இலக்கண நிறைகடல்" "பகையியல் பாயிவி படைக்கை மறவன்" என்னும் பிரயோகம்போல்வதா மென்க." என்றும், இரும்புக் கடலையை யுண்பார்க்கு எத்துணை இனிமையும் நன்மையும் விளைக்குமோ அத்துணை இனிமையும் நன்மையும் விளைக்க எழுதியுள்ளனர். மாதவச் சிவஞானமுனிவர் எச்சிலாகிய தருக்க ஞானத்துள் சிறிது உண்டு நின்ற அறிஞர் எவரும் இவ்வாசிரியர் 'அத்துவிதம்' என்பதற்குக் கூறுகின்ற இன்மைப் பொருளைக் கொள்ளாது அன்மைப் பொருளையே கொள்வர். இச்சிவஞான போதத்திற்குப் பேருரை கண்ட எங்கள் சிவஞான முனிவார் நடந்து சென்ற வழிகளிலும் புரண்டு சென்று புழுதிபடியாதவர் உரையைக் கண்டு எம்மனேராகிய சித்தாந்திகள் மயங்கா ரென்பது எமது துணிபு.

---

# திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை ஆசிரியர் மாணுக்கர்க்கு அறிவுறுத்துவது போல வரையப் பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்பு பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டுளது.

| | | | | |
|---|---|---|---|---|
| அறத்துப்பால் காலிகோ பையிண்டு விலை ரூபா | | 3 | 4 | 0 |
| பொருட்பால் | ,, | 4 | 8 | 0 |
| காமத்துப்பால் | ,, | 1 | 12 | 0 |

பண்டிதர் - கி. குப்புச்சாமி முதலியார்,
3/2, பிள்ளையார்கோயில் தெரு, கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

# கோகழி

[கணபதிப் பிள்ளை, சிதம்பரம்]

கோகழியாண்ட என்பது பசுத்துவ மாயமல வழுக்கை ஞானநீரால் கழுவியாண்டருளிய என்றவாறு.

குறிப்பு : ரூபகம் கழீஇ என்பது கழியெனத்திரிந்து நின்றது. அம்மலங் கழீஇயென்பது மப் பொருட்டாதலறிக.

அஃதேல் அஃதஃதாம் ஆயினும் அம்மலங்கழீஇ யென்ப துயிர்ச்செயலும் கோகழி யென்பது சிவச்செயலுமாய் தம்முள் வேறுபடுதலின் அவை தம்முள் ஒரு பொருளவாகா போலுமெனின், அற்றேல் நின்னை யீண்டொன்று வினவுதும் வினவுமாறு.

திரிமலங்களறுத்து என்பதுயிர்ச் செயலும் "மலமறுத்துத் தானுகி" யெனவும், "அறுத்துமல" மெனவும் வருவன சிவச் செயலுமாம். இதற் கமைதி நீயுரைப்பின் அதற்கமைதியாமுரைத்தும்.

தச்சனெடுத்த வாலயம், அரசனெடுத்த வாலயமென்புழி தச்சன் அரசன் என்ற வினைமுதல் இரண்டற்கும் எடுத்தலென்னும் வினை ஒன்ருதலெவ்வாறு அவ்வாறே யஃதாமெனின் நன்றே யோதினுய்! இதுவுமதுவாமாகலின், சாதனம் பற்றி யறும் மலத்தை அச்சாதன வினையின் முதலாய உயிர்ச் செயலாக வைத்தோதினர், அற்ருகலினன்றே "ஏகனுகி யிறைபணி நிற்க மலமாயை தன்னெடு வல்வினையின்றே" என்றதூஉமது.

கோ - பசு. அஃதீண்டு அஸ்தினபுரம் குருதிக் கோட்டுக் குஞ்சரபுரம் என்பதொப்ப உபசார வழக்குப்பற்றி பசுத்துவத்தை யுணர்த்தி நின்றது. "பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தருளி" என்பது பற்றியு மஃதற்றே யாதல் தெற்றெனவறிக. "பழமல மறுத் தாண்டாய்" என வருவதூஉமிது.

"கோகழிக்கரசே" "கோகழிமேவிய கோவே" "கோகழி நாதன்" என்னுமின்னேரன்ன முன் மொழிகள் பின் மொழி யியைபு பற்றி இப் பொருள் படாமை யறிக.

இனி அஃதப் பொருள்படுதற்கியைபென்னை யெனின் இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காமை என்பது யார்க்கு முண்மையின் அஃததி வியாத்தியென்பாரை நோக்கி, "கோகழியாண்ட குருமணி" யெனவும், அங்ஙனமாளும் நிலை முன்னிலை பின்னிலை தன்னிலை யென முத்திறப்படுமன்றே. இஃதெஃதோ வென்னு மைய மறுத்தற்கு 'ஆகமமாகி நின்றண்ணிப்பான்' எனவும் ஓதப்படுமியைபு பற்றி யுணரப்படும். தோன்றி நின்று பின் சேயனுகா தணியனு மென்றவாறு. இயல் நூலுள் விகாரம் மூன்றனுள் தோன்றலை ஆகமமென வழங்கப்படுதல் பற்றி, ஈண்டுத் தோன்றலை ஆகமம் என்ருர். இனிமை செய்வோனை இனிப்புச் செய்வோன் என்ருற் போல அணிமை செய்வோனை அண்ணிப்பானென்ருர்.

# கோகழி

[தாராபுரம் - நா. ஆறுமுகம் பிள்ளை]

திருவாசகத்தே வரும் "கோகழி" என்னும் சொல்லுக்கு, ஆசிரியர் மறைத் திருவாளர் - சுவாமி வேதாசலம் அவர்கள் திருப்பெருந்துறை என்று உரை வகுத்துள்ளார். அவ்வுரையை மறுத்துச் "சித்தாந்தம்" மலர் ௩ இதழ் ௭-இல் திருவாளர் வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள் சீகாழி என்று உரை கூறுகிறார்.

திருவாசகத்துள்ள "பண்டாய நான்மறை"யில் ஏழு செய்யுட்கள் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டு முதல் ஏழீறாகவுள்ள ஆறு செய்யுட்களினும் மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையைப் பாராட்டியுள்ளார்; இங்ஙனம் ஆறு செய்யுட்களினும் திருப்பெருந்துறையைப் பற்றிக் கூறிய பெரியார் முதற் செய்யுளில் மட்டும் கூறாமலிரார். எனவே, முதற் செய்யுளிலுள்ள "கோகழி" என்னுஞ் சொல் திருப்பெருந்துறையையே குறிக்கும் என்பது திண்ணம்.

சிவபுராணத்தில், "கோகழியாண்ட குருமணிதன் றாள்வாழ்க" என்னும் மூன்றாம் அடி வாழ்த்தின்பாற் படும்; "சீரார் பெருந்துறை நந்தேவனடி போற்றி" என்னும் பதினைந்தாம் அடி வணக்கத்தின்பாற் படும். இவ்விரண்டன் வேறுபாடுணர்த்தவே நம் வாதவூரடிகள் கோகழி என்றும் பெருந்துறை என்றும் ஒரூர்ப் பெயரை இருகால் எடுத்தாண்டனர். இங்ஙனம் எடுத்தாண்டது கூறியது கூறலின்பாற் படாது. "பண்டாய நான்மறை"யில் ஐந்தாம் பாட்டில் ஊரின் பெயராகப் பெருந்துறை யென்றும் இறைவன் பெயராகக் கோகழிக்கரசு என்றும் கூறினமை எங்ஙனம் கூறியது கூறலின்பாற் படுமோ அறிகிலேம். ஒரு பொருளின் உயர்வையோ இழிவையோ வலியுறுத்துக் கூறவேண்டுவோர் அப்பொருட்குரிய பல பெயர்களையோ ஒரே பெயரையோ ஒரே செய்யுளில் பலகாலும் வேறு சொற்களுடன் சேர்த்து எடுத்தாளுவதும் உண்டு. இங்ஙனம் எடுத்தாளுவதை அனுவாதம் என்பர் வடநூலார். ஒரு பொருளின் பல பெயரை எடுத்தாண்டமைக்குப் "பண்டாய நான்மறை"யின் ஐந்தாம் செய்யுளும் ஒரு பெயரைப் பலகாலும் எடுத்தாண்டமைக்குப்புலியூர் என இருகால் எடுத்தாண்ட கீர்த்தித் திருவகவலும் எடுத்துக்காட்டுகளாம்.

திருவாதவூரடிகள் கழுமலம் என்னும் பெயரை எடுத்தாண்டமைபோல் காழி என்னும் பெயரை எடுத்தாளாமையால் கோகழி என்பதற்குச் சீகாழி என்று பொருள் கோடல் ஒரு சிறிதும் பொருந்தாது.

திரு. முதலியாரவர்களைப் போல் மரூஉ இலக்கணம் கொண்டால் தனித் தமிழ்ச் சொற்களைப் பிறமொழிச் சொற்களாகவும், பிறமொழிச் சொற்களைத் தனித் தமிழ்ச் சொற்களாகவுங் கூட ஆக்கிவிடலாம்.

இதுகாறும் ஆராய்ந்த வாற்றான், "கோகழி" என்னுஞ் சொற்கு மறைத் திருவாளர் - சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதிய உரையே பொருத்தமுடைய தென்பது பெற்றாம்.

குறிப்பு:—திருவாசக முதற்கண் உள்ள சிவபுராணம் அகவல் அன்றென்பதைத் திரு. முதலியாரவர்கள் உணர்வாராக.

# * கிறித்து சமயம்

[காழி. சிவ. கண்ணுசாமி, B. A.]

எல்லாச் சமயங்களினும் கட்டுத்திட்டமான ஏற்றத் தாழ்வுகள் மக்கட்டொகுதியிடைக் கற்பிக்கப் பட்டதே போன்று கிறித்தவர்களுடைய கோவிற் சமயத்திலும் வைதீகர்கள், இலௌகீகர்கள், செல்வந்தர்கள், ஏழைகள், ஆள்வோர்கள், அடிமைகள் என்ற வேறுபாடுகள் கற்பிக்கப்பட்டுக் கால்கொண்டன. ஆயினும் கிறித்தவ சமயத்தின் பண்டைய திருத்தமற்ற நிலையைக் குறித்துக் காணக் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டும், கிறித்துவ வேத நூல்களிற் கூறப்பட்டுள்ள உண்மை மொழிகளைக் கொண்டும் ஆய்ந்து பார்க்கின் பிற சமயங்களைக் கேடுறச் செய்யுமாறு கையாளப்பட்ட தலையாய வழிகள் இன்னின்னவாதலின் அவைகள் கிறித்து சமயத்தில் தலைகாட்டக் கூடாதென முன் கூட்டியே எச்சரிக்கப்பட்டுளது தெரியவரும்.

"உன்னை ஆசான் என்று கூறிக்கொள்ளாதே....எவ்வொரு மகனையுந் தந்தையென விளியாதே....நான் ஆள்வோன் என்று அழைத்துக் கொள்ளாதே" என்ற தொடர்களிலிருந்து ஒரு மகன் மற்றொரு மகனுக்குச் சமயத்துறையில் ஆசானாயிருக்க முடியாதென்பதை விளக்கிக் குருமார்களின் ஆதிக்கத்தைக் கண்டித்திருத்தல் எளிதிற் புலனாகும். நூல்களிற் கூறப்பட்டுள்ள உட்கிடையான உண்மைப் பொருளே சிறந்ததாகுமன்றி வெள்ளைப் பொருட் சிறந்ததாகாது என்றும் மக்கள் தம் சமூகப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை வைத்தலாகாதென்றும், கடவுள் நூல்கள் என்று சொல்லப்பட்ட நூல்களெல்லாங் கிளந்தோதும் உண்மைகள் "தன் மாட்டுப் பிறர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று ஒருவன் விழைகின்றானோ அவ்வாறே அவன் பிறர்மாட்டும்நடக்க முற்படவேண்டும்" என்ற ஒரு தொடரில் அடங்கிவிட்டன வென்றும் எடுத்துக் கூறுமுகத்தான் சமய நூல்களுக்குத் தெய்விகச் சிறப்பேற்றி அவைகளை மறை பொருளாக மாற்றும் வழி தடுக்கப்பட்டது தெளியப்படும். அஃதாயின் தெய்வத் திருவிளையாடல்களின் உண்மையைப்பற்றி மறுத்தொன்றுங் கூறிற்றிலரே; அஃதன்று விவிலிய வேதத்தின் கண்ணேயே கிறித்து பல திருவிளையாடல்கள் பயின்றமை கூறப்பட்டுளதேயென்று கேட்கின் கூறுதும்; கிறித்து வானவர் தான் மேற்கொண்டு கற்பிக்க முன்வந்த மெய்ப்பொருளைத் திருவிளையாடல்களையே பற்றுக் கோடாகக் கொண்டு புகட்டவில்லை; மற்றென்னையெனின், அத் திருவிளையாடல்களைக் கொண்டு கற்பிக்க முன் வந்த மெய்ப்பொருளை விளக்கினார் என்பது அவரது திருவாக்கின் உட்கிடையிலிருந்து நன்கு பெறப்படும். ஆனால் மகனுக்கும் பரம்பொருளுக்கும் இடையேயுள்ளதோர் தொடர்பு நோக்கி, "இறைவன் திருமுன் எவ்வுயிருஞ் சமம்" என்ற உண்மை கற்பிக்கப்படாமல் மக்கள் யாவரும் அவனது மைந்தர்கள்,

* இஃது ருஷ்யநாட்டுப் பேரறிஞர் கவுண்ட் லியோ டால்ஸ்டாய் என்பாரெழுதிய கட்டுரையின் நேர்மொழி பெயர்ப்பாகும்.

ஆதலின் உடன் பிறந்தவர்கள் என்ற முறையிற் சமமாகக் கருதப்படவேண்டியவர்கள் என்று கிறித்து சமயத்தின் வாயிலாய்க் கற்பிக்கப்படுகின்றது.

அஃதெவ்வாறாயினும் மக்கள் எல்லோருஞ் சமம் என்பது ஈண்டும் பெறப் படுவதால் அவ்வுண்மை அலைவுறுமாறு கிறித்து சமயத்தைக் கேடுறச் செய்தல் இயலாது என்று நன்கனம் ஊகிக்கப்படுதல் முறையாகும். ஆனால் உண்மை யென்ன? மக்கள் தம் அறிவு பேரறிவன்றோ? அது தெரிந்தோ தெரியாமலோ அன்றித் தெரிந்துந் தெரியாமலோ மக்கள் எல்லோருஞ் சமம் என்ற உண்மை வேரூன்ற முடியாதவாறு பணியாற்றிவிட்டது. அஃதெவ்வாறியன்ற தென்னின், நூல்களிற் கண்ட சில மொழிகளுக்குத் தெய்விகச் சிறப்பும், என்றும் மாறா ஒருபடித்தாய பெருநெறிப் பண்புங் கற்பித்ததனாலும் இவற்றைப் பாமரர்க்கு எடுத்தியம்புவதற் கென்றே யமைக்கப்பட்ட கோவிற் கூட்டத்தார் என்ற ஒரு குழுவினர்க்கும் தெய்விகத் தன்மை கற்பித்ததனாலேயாம். மற்றும் சிற்சில இடங்களில் இரண்டொன்று கூட்டியுங் கொளப்பட்டன. எனவே, இவ்வாறு கோவில் என்ற ஒரு புதுக் கருத்து வேரூன்றி நிலை பெற்றதும் சமயக் கேடுகளைக் குறித்து வேத நூல்கள் கூறிய எச்சரிக்கைகள் தம் வலிவிழந்தன. ஏனென்றோ எப்படியென்றோ உண்மையறிய வினவுவதே சமய வெதிர்ப்பாகக் கருதப்பட்டது. வேதங்களின் உண்மைப் பொருள் இன்னதென்று அவரவரும் பகுத்தறிவிற் கிணங்கப் பொருள் கொள்வதொழிந்து கோவிற் குருமார் எப்பொருள் சொள்ளவேண்டு மெனக் குறித்தனரோ அதையே யாவரும் பொருளாகக் கொள்ளுதல் கடமையாயிற்று.

எனவே, இவ்வழி குருமார்களின் தன்னலம், தெய்வத் திருவிளையாடற் றிரிபுப் பெருக்கம் வேதசாத்திர மறைபொருள் என்ற சமயக் கேட்டிற்காய புறவேதுக்கள் மூன்றுங் கிறித்து சமயத்திலும் புகுந்து இடம்பெற்றன. கடவுட்கும் மக்கட்கும் இடையேயுள்ள தொடர்பை யாக்கி யளித்துக் காக்க ஒரு குரு வேண்டப்படும் எனக் கோவிற்காரர் வகுத்தமையால் குருவினர்க் குழாம் இன்றி யமையாததாயிற்று. குருமார்கள் உளராகவே தெய்வத் திருவிளையாடல்கள் உண்மை யென்றுங் கொள்ள வேண்டியதாயிற்று. என்? குற்றந் தவிர்ந்த கோவிற்காரர் அவை உண்மையே யென்று சான்று பகர்ந்தனராதலின், விவிலிய நூல் வேத நூலாயிற்று; கோவிற்காரர் அதை வேதமென் றழைத்தன ராதலின்.

இவ்வாறு கிறித்து சமய உண்மைகள் திரிபுபட்டன. ஆனால் பிற சமய உண்மைகள் திரிபடைந்ததற்கும் கிறித்து சமய உண்மைகள் திரிபடைந்ததற்கும் ஒரு சிறு வேறுபாடுண்டு. மக்கள் யாவரும் அவன் மைந்தராதலின் அவன் முன் யாவருஞ் சமம் என்ற கிறித்து சமயக் கருத்தை அப்படியே எடுத்து விளக்கினால் தன்னலத்திற்குப் பயன்படாது என்று கண்ட கோவிற்காரர் அதை மக்கள் எளிதிலுணர்ந்து கொள்ளாதவாறு மறைத்து வைப்பதற்கான வழியிற் சமய போதனையைப் பரப்புவாராயினர்.

இதன் பயனாக் கிறித்து சமயத்தில் வேறெந்த சமயத்திலுங் காணமுடியாதனவும், பகுத்தறி விற்கும் இயற்கை யறிவுக்கும் ஒவ்வாதனவுமான பல படிப்பினைகள் கற்பிக்கப்பட்டன. ஒரு சிலவற்றைக் கீழே குறிப்பாம்:

சூரியன் படைக்கப்படுவதன் முன் ஒளி இறைவனாற் படைக்கப்பட்டதாம்.

சரியாக ஆறாயிரம் ஆண்டுகட்கு முன் உலகம் படைக்கப்பட்டதாம்.

பேரூழிக் காலத்தில் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிர்த் தொகுதியினின்றும் ஆணும் பெண்ணுமாக வகைக்கொரு இணையைப் பிடித்து ஒரு சிறு படகில் ஏற்றிக்கொள்ளப்பட்டதாம்.

குழந்தைகளைக் கொல்லவும் ஒரு நாட்டு நன்மக்களை அடியோடழிக்கவும் கட்டளை பிறந்ததாம்.

இவை யாவற்றினும் மேலாக ஒருவனுடைய கடவுளையே உணவாக உட்கொள்ளும் அவலமுறை கடவுளாற் கற்பிக்கப்பட்டதாம்.

கடவுளின் அன்னை கன்னியேயாவர்; ஆனால் அன்னையுமாவர்.

வானம் பிளந்தது; உள்ளிருந்து வாக்குப் பிறந்தது.

கிறித்துவானவர் மேனோக்கிப் பறந்து சென்று வான் மண்டலத்தில் (யாண்டோ ஓரிடத்திற்) கடவுளின் வலது புறத்தே அமர்ந்திருக்கிறார்.

கடவுள் ஒருவரே யாவர்; ஆனால் மூவருமாவர். பிரம்மா, விட்டுணு, சிவன் என்பது போன்று மூன்றுகார்; ஒன்றே யாவர்; ஆனால் மூன்றுமாவர்.

ஆதாம் என்ற ஒருவன் செய்த பிழைகருதி மக்கட்டொகுதி யனைத்தையும் ஒறுக்கும் உள்ளப்பாடுடையவர் கடவுள்; ஆனால் அல்லற்படும் மக்கட் டொகுதியைக் காக்கவே திண்ணமாக மக்கள் அவரைக் கடவுட் சீற்றத்தையுங் கருதாதுகொன்று விடுவார்கள் என்று தெரிந்திருந்தும் மைந்தனாகிய கிறித்துவை உலகிலனுப்பினார்.

அக்கடவுள் மைந்தன் மக்கள் தம் நற்பேறு குறித்தே மக்களால் கொலையுண்டார் என்று நம்பினால் தான் விடுதலை பெறலாம்; இன்றேல் நரகமே கதி.

இத்தகைய படிப்பினைகளை இம்மியளவு அறிவு படைத்த எவனேனும் நம்ப முடியுமா? நம்பி ஒத்துக்கொள்ள முடியுமா? வேண்டுமானாற் காதாற் கேட்ட சில பல மொழிகளை மக்கள் கடமை கருதி வாயினாற் கூறி வரலாம்; ஆனால் பொருளற்ற அம்மொழிகளை அவர்கள் உண்மையென நம்பியே கூறுகின்றார்கள் என்று கொள்ளுதல் அறிவுடைமை யாகுமா? "உலகம் ஆறாயிரம் ஆண்டுகட்கு முன் உண்டாயிற்று." "கடவுள் ஒருவர், ஆனால் மூவர்" என்று ஒருவன் பல்லாயிரம் முறை மொழிந்துகொண் டிருப்பானாயினும் பொருளற்ற அக்கூற்றில் அவன் நம்பிக்கை வைத்தே கூறுகின்றானென்று கொள்ளவுங் கூடுமோ? எனவே, இவ்வாறு திரிபடைந்த கிறித்து சமய உண்மைகளை நம்பினோர் முயற் கொம்பு உண்டென்று நம்பினோரையே ஒப்பர் என்று கூறுதல் மிகையாகாது. இக்காலத்தின் கோலம் இதிற்றான் அடங்கி யுள்ளது.

# ஒ ழு க் க ம்

[C. S. சுவாமிநாத முதலியார்]

(மலர் 3 - இதழ் 7 - 155 - ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னொன்று இங்கே கூறவேண்டிய தவசியம். சாதாரணமாய் செய்ய வேண்டிய தியானம், பூஜை, அநுட்டானங்களை நாம் சரிவரச் செய்தால் தான் பின்பு மேற்சொன்ன அப்பியாசம் சுலபமாய் பழக்கமாகும். காலை மாலையில் அரைமணி நேரம் மனதை அடக்கிக் கடவுள் தியானம், பூஜை, தோத்திரம் முதலியவற்றைச் செய்து ஐம்பொறிகளை அடக்குதல், நற்குணங்களை அடைதல் இவைகளைப்பற்றிச் சிரத்தையுடன் பாடுபடா விட்டால் நாள் முழுதும் கடவுளின் கருணையில் மனதை வைப்பதும் அவர் சந்நிதியிலிருப்பதாக சதா எண்ணுவதும் யாரைப் பார்த்தாலும் அவருள்ளிருக்கும் கடவுளைப் பார்ப்பதாகக் கொள்ளும் வழக்கமும் எங்ஙனம் கைகூடும்? அநுட்டான காலத்தில் முதலில் அப்பியாசம்செய்து நல்ல எண்ணங்களை மனதில் ஆழ உறுத்தி வைத்துக் கொண்டால் பின்பு மற்றக் காலங்களிலும் அவைகள் உள்ளே ஆங்கிலத்தில் (Sub-Conscious mind) என்று சொல்லும் உள்ளடங்கிய மனத்தில் சதா ஊறிக் கொண்டிருக்கும். நாம் வேறு வேலையில்லாது கொஞ்சம் ஓய்வாக இருக்கும் போது அவ்வெண்ணங்கள் தானே வெளி மனதில் தோன்றலாம். நாமும் அவைகளை ஓய்வு காலங்களில் மனதில் வரவழைத்துக் கொள்ளவேண்டும். ஓய்வு காலங்களில் வேறு பயனற்ற எண்ணங்களை எண்ணுவதைவிட காலை அநுட்டான காலத்தில் மனதில் ஊன்றிய எண்ணங்களை மறுபடியும் நினைக்க அப்பியாசம் செய்ய வேண்டும். காலை முதல் கடினமான வேலை செய்து விட்டு மத்தியானம் கொஞ்சம் இளைப்பாற ஆரோக்கிய நாற்காலியில் (lazy chair) அல்லது வேறு இடத்தில் தேகத்தை அமர்த்தி இளைப்பாறுங் காலத்தில் நாம் என்ன செய்கிறோம். சாதாரணமாய் வீணான எண்ணங்களை மனம் போன போக்கில் நினைக்கிறோம். அல்லது சமாசாரப் பத்திரிகைகளிலுள்ள அக்கப்போர்ச் செய்திகளை யெல்லாம் அதிக ஆவலுடன் வாசிப்போம். அல்லது யாராவது வம்பு பேசவந்தால் மிக உல்லாசத்துடன் பயனற்ற சொற்களைப் பேசுவோம். இதையெல்லாம் விட்டு அம்மாதிரி ஓய்வு காலங்களில் தியான அநுட்டான காலத்தில் நிலைநிறுத்திய நல்ல எண்ணங்களைத் திரும்பியும்வெளி மனதுக்குக் கொண்டுவந்து தியானிக்கலாம். இதன் பலனைப் பின்பு நாளடைவில் பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போது நல்ல எண்ணங்கள் தானே உள்ளே நிலவும். யாதேனும் ஒரு மந்திரத்தை எந்த வேலை செய்து கொண்டிருக்கும் போதும் தங்கள் மனதில் உள்ளாக நினைத்துக் கொண்டிருக்கும் வழக்கத்தைச் சிலர் செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் கஷ்டமாயினும் சிரத்தையுடன் அப்பியாசம் செய்தால் அது வருகிறது. அதுபோலவே, யாதாயினும் சில எண்ணங்களை எல்லாரும் உள்ளூற சதா மனதில் தங்கும்படியான பழக்கத்தைப் பயிற்சி



செய்யவேண்டும். மேலே சொன்ன மாதிரி அநுட்டான காலங்களிலும் ஓய்வு காலங்களிலும் மனதில் அம்மாதிரி எண்ணங்களை ஊன்றி உன்னுவோமானால் இந்தப் பழக்கமும் நாளடைவில் கைகூடும். உதாரணமாக சில எண்ணங்களைக் கூறலாம்: 'அன்பேசிவம்,' 'கடவுள் உயிரினுக்குள் உயிர்,' 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது,' 'மனத்துக்கண் மாசிலாமையே இன்பம்,' 'எல்லாம் சிவன் செயல்,' 'எங்குள்ளதும் அவன் உடைமை,' 'எல்லாரும் பரம பிதாவின் மக்களே'; அவரவர்களுக்கு எது அதிகப் பயனை விளைக்கும் என்று தோன்றுகிறதோ அந்த எண்ணத்தை அப்பியாசம் செய்தால் நல்லொழுக்கம் வரும், அதாவது நல்ல செய்கையும், நல்ல எண்ணங்களும், நல்ல பேச்சுமே வரும் அதாவது சிவத்துவம் விளங்கும். சிவசாரூப்யமும் அதுவே.

இந்தப்பயிற்சி சிலதொழிலில் உள்ளவர்களுக்கு மற்ற வேலைகளிலிருப்பவர்களைவிடச் சுலபமாகும். ஒரு வழக்கறிஞர் தங் கட்சியை நியாயாதிபதியின் மனதில் பதியுமாறு வெகு ஜாக்கிரதையுடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் மனம் அந்தப் பேச்சிலேயே ஏகாக்கிரமாய்த் தங்க வேண்டிய தவசியமாகிறது.

அப்போது உள்ளாக வேறு நல்ல எண்ணங்களைப் பற்றியும் நினைத்துக் கொண்டிருப்பது கடினம். நீண்ட அப்பியாசத்தால் அதுவும் முடியும்; முடியாததல்ல. ஆயினும் மிகவும் கடினம். இது சில தொழிலி விருப்பவர்களுக்குச் சுலபம். ஒரு தையற்காரனை உதாரணமாய் எடுத்துக் கொள்வோம். நீண்ட அப்பியாசத்தால் அவன் மனம் சதா அவன் செய்யும் வேலையில் செல்லாமலேயேவேலைசரிவர நிறைவேறும். தையல் இயந்திரத்தில் அவன் காலும் கையும் தானே வேலையைப் பார்க்கும். அப்போது அவன் மனதில் பலவிதமானநல்ல எண்ணங்களை எண்ணலாம்; அல்லது நான் சொன்ன சொற்றொடர்களில் ஏதாவது ஒன்றை நினைத்துக் கொண்டே தையல் வேலையை அவன் நன்றாகச் செய்யக் கூடும். நல்லொழுக்கத்துக்கு அடிப்படையா யிருக்கக் கூடிய பொதுவான ஒரு சொற்றொடரை நினைப்பதைத் தவிர நாம் செய்யும் வேலைக்குச் சிறப்பாய் உரித்தான நல்ல எண்ணங்களை நினைத்தலும் மிகவும் அவசியம். இதற்கு ஓர் உதாரணம் கூறலாம்.

நான் ஒரு தோட்ட வேலைக்காரன் என்று வைத்துக்கொள்வோம். பாத்தி கோலுதல், நீர்ப் பாய்ச்சல், எருவைத்தல், களைபிடுங்குதல் முதலிய அநேக வேலைகளை நான் செய்யவேண்டி யிருக்கிறது. அப்போது நான் என்னென்ன எண்ணுவேன்? நான் ஒரு புஷ்பச் செடியின் அருகிலிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது அது கடவுளின் கோயில் என்று நினைப்பேன். கடவுளின் சக்தியும், அழகும், அன்பும், இன்பமும் அந்தச் செடியில் மேலும் விளங்கப் போவதாக எண்ணுவேன். நல்ல புஷ்பம் தோன்றப் போகிறது. அது பலருடைய கண்ணுக்கு ரம்மியத்தையும், மனதுக்கு இன்பத்தையும், உணர்ச்சியில் தூய்மையையும் உண்டாக்கப் போகிறதென்று எண்ணுவேன். செடியில் கடவுட் டன்மையும், அதைப் பார்த்து ஆனந்தப் படுகிறவர்களிடத்தில் கடவுட் டன்மையும் பெருகப் போகிறதென்று நினைப்பேன். இந்த எண்ணங்

களை எரு வைக்கும்போதே, நீர்ப் பாய்ச்சும் போதே எண்ணுவேன்.

குழந்தையிடத்தில் செய்வதுபோல் செடியினிடத்தில் அன்பைச்செலுத்துவேன். இந்த எண்ணங்களுக்காகத் தனிக்காலம் வேண்டியதில்லை. சாதாரன தோட்டக்காரன்வேலையைப்பார்த்துக்கொண்டே இந்த எண்ணங்களான கடவுள் வழிபாட்டைச் செய்வேன். எனக்கும் நல்ல கதியுண்டாகும். தோட்டமும் அழகாகவும், பரிமளமாகவும் இருக்கும். தோட்டத்துக்குள் உலாவுகிறவர்கள் என் நல்ல எண்ணங்கள் நிரம்பியிருக்கும் மானசக் காற்றையும் தூலமான நல்ல காற்றையும்உட்கொள்ளும்போதேதங்கள் மனதில் கொள்வார்கள். சாதாரணத் தோட்டக்காரர்கள் பார்த்துக் கொள்ளும் தோட்டங்களை விட என் தோட்டம் மிகவும் ஆனந்தகரமானது என்று வருகிறவர்கள் சொல்வார்கள். அன்பு நிறைந்த நல்ல எண்ணங்கள் செடிகளுக்குச் செழிப்பையும் அழகையும் கொடுக்கும். சமீப காலத்தில் பிரஞ்சு தேசத்தில் ஓர் ஐரோப்பிய மாது சிரோமணி தன் தோட்டத்தில் எண்ணத்தின் பலனைப் பரிசோதனை செய்தாள். சில ரோஜாச் செடிகளுக்கு தன் அன்பைச் செலுத்துவது வழக்கம். சில செடிகளுக்கு நீர்பாய்ச்சுவது முதலியவற்றை மாத்திரம் செய்வதையொழிய நல்ல எண்ணங்களைச்செலுத்துவதில்லை. முன் சொன்ன செடிகளில் மிகவும் அழகான புஷ்பங்கள் பூக்கும். பின் சொன்ன செடிகளில் உற்பத்தியாகும் புஷ்பங்கள் அவ்வளவு நன்றா யிருக்கிறதில்லை. இம்மாதிரி அநேக பரிசோதனை செய்தபின் அந்த மாது சொன்னவற்றை நான் ஓர் ஆங்கில பத்திரிகையில் வாசித்தேன்.

அமெரிக்காவில் சமீபகாலத்தில் எமெர்சன் என்ற பெயருடைய ஒரு மஹாஞானியிருந்தார் என்பது அநேகருக்குத் தெரிந்திருக்கும். தன் தோட்டத்தில் உள்ள மரங்கள் தன் அன்பை உணருகின்றன. அதனால் அவைகள் ஆனந்தம் அடைகின்றன என்பதற்குச் சந்தேகமில்லை. அது தன் அநுபவம் என்று ஒரு புத்தகத்தில் எழுதியிருக்கிறார். நாம் சாதாரணமாய் வைக்கும் தூல எருவோடு அன்பான ஆனந்தமான எண்ணங்களாகிய எருவையும் செடிகளுக்கு வைக்கப்பயிலவேண்டும். என்போன்ற தோட்டக்காரர்கள் மாத்திரமல்ல, தோட்டத்தில் உலாவவோ அல்லது மற்ற வேலைகளுக்காகவோ வருகிற மக்கள்கூட இந்த எருவை வைத்துத் தங்கள் சுகத்தையும் செடிகளின் சுகத்தையும் அபிவிர்த்திசெய்து கொள்ளலாம். மிகவும் சுலபமான கடவுள் வழிபாடு முறைகளையும், நமக்கும் பிறருக்கும் பயன்படுகிற சன்மார்க்க ஆனந்த நெறி முறைகளையும் நாம் கவனியாது எட்டுச் சுரக்காய்ப் பேச்சுகளைப் பேசி வீண் வாதத்தில் எவ்வளவோ காலத்தையும் சக்தியையும் அவலமாய்ப் போகச்செய்கிறோம். அந்தோ! என்ன அறியாமை! வேறு முக்தி நெறியைத் தேடிக்கொண்டு உலக காரியங்களையும், உலக வாழ்க்கையையும், நம் சொந்த மனைவி மக்களையும் மற்றவர்களையும்விட்டு அகல வேண்டியதேயில்லை. வேறு விதமான யோகத்தால் அடையக்கூடிய முக்தி நிலை இருப்பினும் நம்போல் உலக வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு நான் வற்புறுத்தும் நெறி தற்காலம் நமக்குப்போதுமானது. நாம் சாதாரணமாய் எட்டாத விஷயங்களைப்பற்றி அதிகமாய்ப்பேசுகிறோம். அம் மாதிரியான நிலைகளைப்பற்றி வாசித்திருப்பதால் உபந்நியாசங்கள் செய்வோம். அதெல்லாம் என்போன்றவர்களுக்கு எட்டுச் சுரக்காய். நமக்குக் கிட்டக்கூடிய நல்ல மார்க்கம் நல்ல பயிற்சிகளைக் கவனிக்க வேண்டும்



என்று சொல்லத்தான் நான் இப்போது முன் வந்தது. நான் வற்புறுத்தும் நன்னெறியைக் கடைப்பிடித்தால் பின்பு பெரியோர் அநுக்கிரகத்தால் மேலான-கடினமான யோக அப்பியாசங்கள்முதலியன நமக்குக்கைகூடும். எந்த காலத்தில் யோகசித்திகள் நமக்கும் உலகத்துக்கும் நன்மை விளைக்கும் முறையில் நமக்குச் சித்தித்துப் பயன்படுமோ அந்த பக்குவ காலத்தில் நமக்கு அவர்களே அவைகளை உதவுவார்கள். நாம் அவைகளில் ஆசை வைத்துத் தேடுவது தவறு. பரோபகார அன்பு நெறியிலும், சன்மார்க்கத்திலும், தூல சூக்கும, மானசீக உடல்களின் தூய்மையிலும் ஈடுபட்டு வாழ்க்கை நடாத்தும் தன் சற்புத்திரர்களுக்குப் பரம பிதா தன் கருணையை முதிர்ந்த அடியார்கள் மூலமாய், முனிவர்கள் மூலமாய்ச் சேர்ப்பிப்பார். நன்னெறியில் பக்குவமான காலத்தில் நம்மைத் தேடி வந்து அவர்கள் உதவி புரிவார்கள். அவர்களைத்தான் இராமலிங்க சுவாமிகள் சற்சபையார் நற்சபையார் பொற்சபையார் என்றும், தாயுமானவர் சித்தர்கணம் என்றும் கூறினர். அவர்கள் சீடர்களைக் கை தூக்கிவிட காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒரு சபையினராகச் சொல்வது பொருந்தும்.

“வாழையடி வாழையென
வந்த திருக் கூட்டம் அது”

நாமும் அக்கூட்டத்தை யடைய வேண்டுமானால் நல்லொழுக்க வழியைச் சேர்ந்தால் முடியும். சன்மார்க்க நெறியாகிய நல்லொழுக்கத்தில் நின்று கடவுள் வழிபாட்டைச் செய்யவேண்டியது நமது முதன்மையான கடமை. அதைச் செய்யாமல் வெறும் வாசிப்பினாலும், கேவலம் சடங்குகளாகச் செய்யும் பூஜை அநுட்டானங்களாலும் மட்டும் நாம் சிவ நெறியில் முன்னேற்ற மடைவோ மென்றிருப்பது மடமையாகும். சீரிய ஒழுக்கமும் நல்வாழ்க்கையும் கூடியதான செந்நெறியே நமக்கு இன்றியமையாத கடவுள் வழிபாடாகும்.

இராமலிங்க சுவாமிகளருளிய இரண்டு பாக்களை முடிவில் கூறி முடிக்கின்றேன். அவையாவன:—

“சரியையோர் நான்குங் கிரியையோர் நான்குஞ் சாற்றிடும் யோகமோர் நான்கும், புரியவும் பதங்கள் பொருந்தவுமெனது புந்தியிலாசை சற்றறியேன், பெரிய தோர் ஞான நான்கினுமாசை பெற்றிலேன் முத்தி பெற்றிடவும், உரிய தோரிச்சை யெனக்கிலையென்ற னுள்ளநீ யறிந்ததே யெந்தாய்.”

“சற்சபைக் குரியார் தம்மொடுங் கூடித்தனித்தபே ரன்பு மெய்யறிவும், நற்சபைக்குரிய வொழுக்கமு மழியா நல்ல மெய்வாழ்க்கையும் பெற்றே, சிற்சபை நடமும் பொற்சபை நடமுந் தினந்தொறும் பாடி நின்றாடித், தெற்சபையுலகத் துயிர்க்கெலா மின்பஞ் செய்வதென் னிச்சையா மெந்தாய்.”

குறிப்பு :—“ஜீவன் கடவுட்டன்மையை அடைவதால் கடவுளுடன் இரண்டறக் கலந்து நிற்கின்றான். கடவுளாக ஆகின்றான் என்பது கூட தவறாகாது. நான் சித்தாந்த, மாயாவாத, அத்வைத சச்சரவில் நுழையவில்லை. சிவனும் ஜீவனும் ஒன்றுபட்டன என்பதே. இது இயற்கை மதம். வைதீக சைவ சித்தாந்திகளின் தொன்று தொட்டு வழங்கும் கொள்கைக்கு இம்மாதிரி கூறுவது முரணாயிருக்கலாமோ என்னமோ? அப்படியாயின் பெரியோர் என்னை மன்னிக்க வேண்டியதுதான்” என்று இவ்விடயத்தை யெழுதியவர் கூறுவதால், இவர் பொருள் ஒன்றே என்று கூறும் ஏகான்மவாத சித்தாந்தியாக இல்லாது, தாங்கொண்ட பிரம்மஞான சபையின் பரந்த நோக்கத்தையுடையவராகக் காணப்படுகின்றனர். இவ்விதங் கூறினும்,

“அவனிவ னனதவ னருளா லல்லது
இவனவ னாகானென் றுந்தீபற
என்றுமி வனேயென் றுந்தீபற”

என்னுஞ் சைவ சித்தாந்தக் கொள்கைகளுக்கு இவை பொருந்ாதனவே யாகும். [உ·ப·ர்.]

# பதினோராந்திருமுறை

[விநாயகர் சதுர்த்தி காலத்தில் ஓதுதற்குரியது]

என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசு மகிழ்சோலை வியனாரை யூர்முக்கண்
அரசுமகி ழத்திமுகத் தான். க

முகத்தாற் கரியனென் றாலுந் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை யுன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூ ரம்மான் பயந்தவெம்மான்
உகத்தா னவன்ற னுடலம் பிளந்த வொருகொம்பனே. உ

பேசத் தகாதெனப் பேயெரு தும்பெருச் சாளியுமென்
றேசத் தகும்படி யேறுவ தேயிமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழி லுங்கையு நுந்தையு நீயுமிந்தத்
தேசத் தவர்தொழு நாரைப் பதியுட் சிவக்களிறே. ங

அவமதியா துள்ளமே யல்ல லறநல்ல
தவமதியா லேத்திச் சதுர்த்தோ—நவமதியாங்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். ச

—நம்பியாண்டார் நம்பி.

---

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை. க

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. உ

கனிய நினைவொடு நாடொறுங் காதற் படுமடியார்க்
கினிய னினியொரு வின்னுங் கிலமெவ ரும்வணங்கும்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைப்பவி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல் யானை முகத்தவனே. ங

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேன்—மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் றந்தளித்த
போதகத்தின் றாள்பணியப் போம்.

—கபிலதேவ நாயனார்.

உ

சிவமயம்

# திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலைப் பிரவேசச் சிறப்பு

இவ்வித்தியாசாலை விலக்கிரயத்தோடு பதினாயிரம் ரூபாவில் கட்டி முடிக்கப்பெற்றது. கண்டவர் கண்கள் மீளாக்காட்சித்தாகி விண்ணோக்கி மேற்போந்து நிற்குஞ் சிறப்பு வியக்கற்பாலது. அதனை என்றும் யாவருங்கண்டும் அறியலாம்.

பிரமோதூதஞு ஆனிமீ முப்பதாந்தேதி இவ்வித்தியாசாலைப் பிரவேச விழா நடைபெற்றது. அதன் சிறப்புச் செப்பவும் பெரிது. கல்வெட்டுக் கவசத்திறப்பு, தருமபுராதீன மடாலயத்து ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகளாலும், கபாடத் திறப்பு, மதுரைத் திருஞான சம்பந்த சுவாமி மடாலயத்து ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகளாலும் நடத்தப்பட்டன.

சென்னை, பெருந்தோட்டம், தருமபுரம், திருப்பெருந்துறை, நேமத்தான்பட்டி, மதுரை, திருநெல்வேலி, திருநெல்வேலிப்பேட்டை, கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், ஆத்தூர், போடிநாயக்கனூர், நாகர்கோயில் என்னும் நகரங்களிலிருந்து பல வித்துவான்களும், உத்தியோகஸ்தர்களும், பிரபுக்களும், மிராசுதார்களும், தம்பிரான் சுவாமிகளும், ஓதுவார்களும் பேரார்வத்துடன் வந்து மூந்திச் செந்தில்வேற் பெம்மான் திருவடி தெரிசித்து அவர் தண்ணளித் திருநோக்கம்பெற்று, உழுவலன்பினராய், வித்தியாசாலைப் பிரவேசத்தன்று அவண் குழுமி ஆதிசைவ விப்பிரால் அங்கு நடத்தப்பட்ட பிரவேசக்கிரியை விசேடங்கண்டுகளித்து அது முற்றுப்பெற்ற பின்னர் வித்தியாசாலை அதிபரும் பிறரும் எதிர்பாராத நிதிப்பரிசளித்து அச் சிறப்பித்துச் சந்தனம், தாம்பூலம், பனிநீர் ஆதியன கொடுக்கப்பெற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

தருமபுராதீன மடாலயாதிபதி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் மதுரையாதீன மடாலயாதிபதி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமும் சொக்கலிங்கமூர்த்தியின் மகாப்பிரசாதமும் பட்டுப் பீதாம்பரங்களும் ரூபாவும் தம்பிரான் சுவாமிகள் மூலம் அனுப்பிப் பிரவேச விழாவைச் சிறப்பித்த அரும்பெருஞ்செயலைச் சபையோர் வியந்து மகிழ்ந்து மேலும் மேலும் பாராட்டினார்கள். இம்மகா சந்நிதானங்களுக்குக் கல்வியின் மேலுள்ள வேணவாவை, இவர்கள் செய்த அரும்பெருஞ்செயல், யாவருக்கும் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிற் புலப்படுத்திவிட்டது.

தருமபுர மகா சந்நிதானம் அரும்பெறற் பொருளுபகரித்துச் சிறப்பித்த அளவில் அமையாது, “சுப்பிரமணிய வித்தியாசாலை” என்றும் நிலைபெற்று நிலவி நின்று எவர்க்கும் நன்று பயன்பட கனியருட்புரிகவெனப் பிரார்த்தித்து, செந்திநாதக் கடவுளுக்கு விசேட அபிடேக நைவேத்திய ஆராதனை செய்வித்து, பிரசாதத்தை வித்தியாசாலைச் சபையில் யாவர்க்கும் உபயோகப்படுத்தும்படி செய்வித்த வேணவா விழுத்தகைமையைச் சபையார் வேறாக வெடுத்து வியந்து கூறிப் பாராட்டினார்கள்.

மகா சந்நிதானத்தின் திருவுளத்திற்கேற்ப அபிடேகாதியவற்றை மிகு சிறப்பாக முற்றுவித்து, பிரசாதத்தை, சமயநோக்கியிருந்து சபையாருக்கு உபயோகித்து மகிழ்ச்சி மிகச்

செய்த பிரமஸ்ரீ ஆழ்வாரய்யாவர்கள் காரியநிர்வாக விசேடத்தைச் சபையார் கண்டு வியந்தனர்.

அன்புடன் பிரவேச விழாவிற்குவந்த அந்தணர் முதலியோர்க்குப் பூரி கொடுக்கப்பட்டது. மாகேசுரபூசை விதிப்படி சிரத்தையோடு மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டது.

பிரவேசத்து அன்று இரவு எழு மணி தொடங்கிப் பலவித்துவான்கள் பல விஷயங்களைப்பற்றிப் பிரசங்கஞ் செய்தார்கள்.

| | பிரசாரகர் ஊர் பேர் | | விஷயம் |
|---|---|---|---|
| க. | மதுரை | ஸ்ரீமான் சொக்கலிங்க பிள்ளையவர்கள் | பதிநிச்சயம் |
| உ. | சென்னை | ,, சமரபுரி முதலியாரவர்கள் | முருகன் கருணை |
| ந. | செந்தில் | ,, முத்துக்குமார சுவாமிப் பிள்ளையவர்கள் | பெரியாரைப் பேணல் |
| ச. | மதுரை | ,, சிதம்பர ஓதுவாரவர்கள் | வித்தியாசாலைத் தாபனமாதியன |
| ரு. | மாநாடு | ,, சோமசுந்தர உபாத்தியாயரவர்கள் | சுப்பிரமணிய வித்தியாசாலை |
| சு. | செந்தில் | ,, வள்ளிநாயகம் பிள்ளையவர்கள் | 'திங்கடோய்' என்னும் பாட்டு |
| எ. | ,, | ,, பிரமநாயக வோதுவாரவர்கள் | ஆலமுது என்னும் பாட்டு |
| அ. | திருப்பெருந்துறை | ஸ்ரீமான் கதாரத்தினசாகர சாஸ்திரிகள் | பிள்ளையார் பள்ளிக்கூடம் |
| கூ. | செந்தில் | ,, திருப்புகழ் விநாயக வோதுவாரவர்கள் | தலைமிமை |
| க0. | ,, | ,, நெல்லைவடிவேற் பிள்ளையவர்கள் | வாழ்த்து |
| கக. | நாகர்கோயில் | ,, ஆறுமுகம் பிள்ளையவர்கள் | சித்தாந்த சாத்திரம் |
| கஉ. | யாழ்ப்பாணம் | ,, சுவாமிநாத பண்டிதவர்கள் | முடிவுரை. |

### உ-ம் தினம் இரவு

க. திருப்பெருந்துறை பிரமஸ்ரீ கதாரத்தினசாகர சாஸ்திரிகள்...பார்வதி திருக்கல்யாணம்
உ. திருச்செந்தூர் ஸ்ரீமான் முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையவர்கள்...வந்தனோபசாரம்
ந. ,, ,, திருப்புகழ் விநாயகவோதுவாரவர்கள் ,,

### ந-ம் தினம் இரவு

| | | | |
|---|---|---|---|
| க. | சின்னமனூர் | ஸ்ரீமான் அண்ணாமலைப் பிள்ளையவர்கள் | சுயமரியாதை சைவமாண்பு. |
| உ. | மாநாடு | ,, சோமசுந்தர உபாத்தியாயரவர்கள் | வந்தனோபசாரம். |
| ந. | செந்தில் | ,, திருப்புகழ் விநாயக வோதுவாரவர்கள் | ,, |

### ச-ம் தினம் இரவு

க. பிரமஸ்ரீ முத்தையாவர்கள்
உ. ஸ்ரீமான் சோமசுந்தர உபாத்தியாயரவர்கள்
ந. ,, சுப்பையா வோதுவாரவர்கள்
} தேவார பாராயணம்.

### ரு-ம் தினம் இரவு

க. ஆத்தூர் ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளையவர்கள் ஆன்ம லாபம்.

உ. யாழ்ப்பாணம் ஸ்ரீமத் சுவாமிநாத பண்டிதரவர்கள் கந்தசுவாமி கருணையற்றவர் ஆதலாற் கடவுளல்லர்; காந்தி கருணையுற்றவர் ஆதலாற் கடவுள் அவரே; என்பார் கூற்றைப் பூர்வபட்சம் செய்தல்.



### கத்தியபத்தியக் கடிதங்கள்

சென்னை பிரமஸ்ரீ மகா மகோபாத்தியாயர் சாமிநாதையரவர்கள், ஸ்ரீமான் 'சித்தாந்தம்' பத்திரிகாசிரியரவர்கள் வக்கீல் பி. ஏ. பி. எல்., எம். எல். சி. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், ஸ்ரீமான் புழலை பண்டித ரத்தினம் ஆனரெரி மாஜிஸ்திரேட் திருநாவுக்கரசு முதலியாரவர்கள், சிதம்பரம் பச்சையப்ப முதலியார், இங்கிலீஷ் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் தருமலிங்கம் பிள்ளையவர்கள், திருவேட்களம் யூனிவேர்சிட்டிக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் சர்க்கரைப் புலவரவர்கள், வைத்தீசுரன் கோயில் காரான சற்குணசபை ஆசிரியர் ஸ்ரீமான் இராமையாப் பிள்ளையவர்கள், கேமத்தான்பட்டி ஸ்ரீமான் மு. வெ. காசிச் செட்டியாரவர்கள், அமராவதிபுதூர் ஸ்ரீமான் வயி. நாக. ராம. அ. வேங்கடாசல செட்டியாரவர்கள், தேவக்கோட்டை ஸ்ரீமான் வெ. ஆ. தி. சிதம்பரஞ் செட்டியாரவர்கள், சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் பொ. முத்தையப் பிள்ளையவர்கள், திருப்பெருந்துறை ஸ்ரீமான் சிங்காரவேலுத் தம்பிரான் சுவாமிகள், கோயமுத்தூர் வக்கீல் பி. ஏ. பி. எல். ஸ்ரீமான் வேங்கடாசல முதலியாரவர்கள், வக்கீல் பி.ஏ. பி.எல். ஸ்ரீமான் சுப்பிரமணிய முதலியாரவர்கள் ஆகியோர் பேரன்புடன் அனுப்பிய இருவகைக் கடிதங்களும் சபையில் வாசிக்கப்பட்டன.

திருச்செந்தூர் மேலைக்கோபுரத்துத் திருப்பணி மடாலயாதிபதியாகிய ஸ்ரீமத் ஆறுமுக சுவாமிகள் வித்தியாசாலை கட்ட ஆரம்பித்த நாள்முதல் முற்றுப்பெற்ற நாள்வரை இடையீடுபடாமற் செய்த வுதவியாற்றான் இத்துணை விரைவில் வித்தியாசாலை பூர்த்தியாயிற்று.

இவரனைவருக்கும் கலியுகவரதர் கருணை செய்து நல்வாழ்வு கொடுத்து உய்வித்தல் வேண்டுமென அவரடிமலர் முடிமிசைக் கொண்டு தியானிக்கின்றேன்.

கண்டுகளித்த தொண்டன்,

திருச்செந்தூர் வாசி.

---


## இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

### திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றியது

இராமலிங்க சுவாமிகள் வேதாந்த சமரச சன்மார்க்கத்தில் நின்று, அருணெறியோம்பி, உயிர்கள் வழிபாடே கடவுள் வழிபாடு என்பதை யுணர்ந்து, சமயவாழ்வு நடாத்திய விதம், அவர் ஆண்டவனை நோக்கிச் செய்த முறையீடு, அழுத அழுகை, அவர் கொண்ட குரு, பொருணூல், வழிபடுகடவுள், அவரடைந்த மரணமிலாப் பெருவாழ்வு, அதற்குரிய முறை முதலியன தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இக்காலதேச வர்த்தமானம் வேண்டுஞ் செம்மைச் சீர்திருத்தங்கள் பல இந்நூற்கண் மிளிர்கின்றன. விலை ரூபா 1.

### கடவுள் காட்சியும் தாயுமானாரும்

இந்நூலின் திரண்ட கருத்து மெய்ம்மையில் கடவுள்காட்சி பெறலாமென்பது. கடவுளின் அருட்டன்மையும், படைப்பு முறைகளும், படிகளும், படைப்பின் நோக்கமும், உயிர்களின் கடமையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பட்டிருக்கின்றன. விலை அணு 4.

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.

# நம் சமாஜத்தின் அரிய தொண்டுகள்

[சைவத் தொண்டன் எழுதுவது]

திருவிடை மருதூர் சைவ இளைஞர் மகா நாட்டின் 2, 5-ஆம் தீர்மானங்களை நடைமுறையிற் கொண்டு வருவதின் பொருட்டுப் பல்லாவரம் பொதுநிலைக்கழக மாணவர் திரு. மறை. திருநாவுக்கரசுவின் தூண்டுதலால் பல்லாவரத்துக்கடுத்த குரோம்பேட்டை ஆதிதிராவிடர் வாழும் ஊரில் 18-5-30-ஆம் நாள் மாலையில் ஆதிதிராவிடர்கள் குழுமியுள்ள தோரிடத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கூட்டமொன்று கூடியது.

அக்கூட்டத்திற்கு ஆதம்பாக்கம் திருவாளர் சோமசுந்தரம் பிள்ளை தலைமை பூண "புனித வழிபாடு" என்ற பொருள்பற்றி மறை. திருநாவுக்கரசும், "கொல்லாமை" என்பதுபற்றித் திருவாளர் இளவழகனாரும் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின், அக்கூட்டத்தைக் கூட்டிய ஆதிதிராவிடச் சைவ மெய்யன்பரும், சைவ சித்தாந்த மகா சமாஜ உறுப்பினரும், குரோம்பேட்டை கணேசர் கோயில் குருக்களும் ஆன திருவாளர் கோபால்சாமி என்னும் கணேசன் என்பவரால் நன்றி கூறப்பட்டுக் கூட்டங் கலைவுற்றது.

---

## ஆதிதிராவிடர் ஊரில் சிவபிரானுக்கு விழாவும் நம் சமாஜத் தொண்டும்

குரோம்பேட்டை கணேசர் கோயிலில் 25-5-30-ஆம் நாள் கத்திரிவிழா அடியிற் கண்டவாறு நடைபெற்றது. காலையில் ஆண்டவனுக்கு (அபிஷேகம்) திருமுழுக்குகள் நடைபெற்றன. நடுப்பகலில் கஞ்சி வார்க்கப்பட்டது. உடனே, அழகாகச் செய்யப்பட்ட (சப்பரம்) தூக்குத் தேர்மீது அம்மையப்பர் ஓவியம் அழகாக அமைக்கப்பட்டு ஆதிதிராவிடர் ஊரில் ஊர்வலம் நடந்தது. இரவு ஏழு மணிக்கு நம் சமாஜத் தொண்டர் திருவாளர் மறை. திருநாவுக்கரசு அவர்களால் "திருநாவுக்கரசு சுவாமிகளின் வரலாற்றின் முற்பகுதி" விரிவுரை செய்யப்பட்டது. உடனே, வந்திருந்தவர்கட்குப் பழம், கற்கண்டு, சுண்டல் முதலியன வழங்கிய பின் இரவு 9½-மணிக்குக் கூட்டங் கலைவுற்றது. இவைகளைத் தன் செலவில் திறம்பட நடத்தியவர் மேற் குறிப்பிட்ட ஆதிதிராவிடராகிய திருவாளர் [illegible] என்பார்.

## அருந்ததியர் (சக்கிலியர்) தெருவில் நம் சமாஜத் தொண்டு

பல்லாவரத்திலுள்ள அருந்ததியர் தெருவிலுள்ள பஜனைக்கூடத்திற்கு முன்பு 20-5-30-ஆம் நாளிரவு 9 மணிக்கு அருந்ததிய வகுப்பினராய நடராஜன் முயற்சியால் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் "திருஞான சம்பந்தர்" வரலாற்றின் முற்பகுதியைத் திருவாளர் மறை. திருநாவுக்கரசு அவர்கள் விளக்கமாக ஒன்றரைமணி நேரம் சொன்னார்கள்.

---

## பம்மல் என்ற ஊரில் சமாஜக் கூட்டம்

பல்லாவரத்திற்கடுத்த பம்மல் என்ற சிற்றூரில் கிருத்திகை விழாவை ஒட்டிப் பிள்ளையார் கோவில் முன்பு 27-5-30-ஆம் நாள் மாலை கூடிய கூட்டத்தில் மறை. திருநாவுக்கரசு அவர்களால் "திருவாசகச் சிறப்பு" என்ற பொருள்பற்றி இரண்டு மணி நேரம் இனிதாக விரிவுரை செய்யப்பட்டு இரவு 8 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

---

## கோல்லஞ் சாவடியில் சமாஜக் கூட்டம்

பல்லாவரத்துக் கடுத்துள்ள கொல்லஞ் சாவடியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பிள்ளையார் பெருமானின் மண்டலாபிஷேகத்தை ஒட்டி மேற்படி யூரிலுள்ள சை. சி. ம. சமாஜ உறுப்பினராய அங்கப்பக் குருக்களவர்களின் நன் முயற்சியால் 27-5-30 ஆம் நாளிரவு மேற்படி பிள்ளையார் கோவிலின் முன்பு ஒரு கூட்டங் கூடியது. அக்கூட்டத்தில் "பெரிய புராணத்திலுள்ள மெய்ப்பொருள் நாயனார் புராணத்தை"த் திருவாளர் மறை. திருநாவுக்கரசு அவர்கள் இரண்டு மணி நேரம் வரையில் விரிவுரை செய்தார்கள். பின், சர்க்கரைப் பொங்கல் முதலியன வழங்கப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

187145

## ஆலங்குடி கும்பாபிஷேக விசேஷ மகாநாட்டு

# வரவு செலவு கணக்கு சுருக்கம்

### நன்கொடை

| வரவு | ரூ. | அ. |
|---|---|---|
| வேடம்பூர் ரா. நன்னாறு பிள்ளை | 27 | 0 |
| ஷை சொ. சாமிநாத பிள்ளை | 25 | 12 |
| ஷை ச. இராமலிங்கம் பிள்ளை | 25 | 12 |
| தஞ்சை க. ஷண்முகம் பிள்ளை | 25 | 0 |
| கண்டியூரார்கள் 700 கீற்று, 50 மூங்கில் கொடுத்த வகையில் | 25 | 0 |
| தஞ்சாவூர் குமாரசாமி பிள்ளை | 15 | 0 |
| ஷை அ. நடேச பிள்ளை | 10 | 0 |
| ஷை பொன்னுச்சாமி பிள்ளை | 10 | 0 |
| செங்கரையூர் பொன்னண்ணு னத்தில் வெள்ளூர் வசூலித்தது | 10 | 12 |
| சேவல்பட்டி ஷண்முகம் பிள்ளை | 5 | 0 |
| தஞ்சை மூராசி இராமசாமி செட்டியார் | 5 | 0 |
| ஷை கோ. வேலாயுதம் பிள்ளை | 4 | 0 |
| ஷை கோ. அமிர்தலிங்கம் பிள்ளை | 4 | 0 |
| செங்கனூர் க. நாகலிங்கம் பிள்ளை | 4 | 0 |
| வேடம்பூர் வேளார் | 3 | 2 |
| தஞ்சை சு. பக்கிரிசாமிப் பிள்ளை வசூலித்தது | 3 | 0 |
| ஷை வா. சிங்காரம் பிள்ளை | 3 | 0 |
| ஷை சேவல்பட்டி கணபதியா பிள்ளை | 3 | 0 |
| வேடம்பூர் சி. வாஞ்சிலிங்கம் பிள்ளை | 2 | 8 |
| தஞ்சை த. பொ. அழகர்சாமி பிள்ளை | 2 | 4 |
| ஷை இஞ்சினீர் ஊ. கந்தசாமிபிள்ளை | 2 | 0 |
| ஷை த. அ. சிவசங்காம் பிள்ளை | 2 | 0 |
| ஷை இராமச்சந்திரம் பிள்ளை | 2 | 0 |
| ஷை பாவுக்காரத் தெரு பஞ்சநதம் பிள்ளை | 2 | 0 |
| ஷை வண்டிக்காரத் தெரு பஞ்சநதம் பிள்ளை | 2 | 0 |
| வேடம்பூர் செ. சோமு பிள்ளை | 1 | 14 |
| ஷை சி. த. சீனிவாசம் | 1 | 8 |
| ஷை ரா. சாமிநாத பிள்ளை | 1 | 8 |
| தஞ்சை உலகநாதம் பிள்ளை | 1 | 0 |
| ஷை மாணிக்கம் பிள்ளை | 1 | 0 |
| ஷை சொ. அரங்கசாமி பிள்ளை | 1 | 0 |
| வெங்கட்ராமன் உடையார் | 1 | 0 |
| வேடம்பூர் சரவண பிள்ளை | 0 | 12 |
| கண்டியூர் சா. க. நடேச பிள்ளை | 0 | 4 |
| மிகுதி சாமான் விற்ற வரவு | 19 | 4 |
| சாமி. வேலாயுதம் பிள்ளை செலவு செய்திருப்பது | 159 | 9 |
| | 411 | 13 |

| செலவு | ரூ. | அ. |
|---|---|---|
| தேவார பாடகர் செலவு | 17 | 8 |
| பூ, மாலை | 14 | 0 |
| அரிசி | 44 | 0 |
| பருப்பு, காய்கறி முதலியன | 96 | 1¼ |
| சமையல்காரர் கூலி | 40 | 0 |
| பாக்கு, வெற்றிலை முதலிய சாமான் | 33 | 4¼ |
| கீற்று, மூங்கில் | 25 | 0 |
| பந்தல் போடுதல் முதலிய கூலி | 16 | 5 |
| அச்சுக்கூலி | 39 | 12½ |
| தபால் | 8 | 2 |
| பணியாளர் போக்கு வரவு | 13 | 4 |
| சொற்பொழிவாளரின் போக்கு வரவு | 61 | 8 |
| எதிர்பார்க்கக் கூடிய செலவுகள் | 3 | 0 |
| ஆ | 411 | 13 |

### இனி வசூலாகக் கூடியது

| | | |
|---|---|---|
| வேடம்பூர் ரா. சாமிநாத பிள்ளை | 25 | 0 |
| ஷை சித. சீனிவாச பிள்ளை | 25 | 0 |
| ஷை சி. கோவிந்தசாமி பிள்ளை | 25 | 0 |
| ஷை சா. மாணிக்கம் பிள்ளை | 20 | 0 |
| செய்க்குப்பை ரா. கணபதி பிள்ளை | 3 | 0 |
| தஞ்சை முத்தையா பிள்ளை | 2 | 0 |
| | 100 | 0 |

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 8.

# நமது சமாஜ வெள்ளிவிழா அறிக்கை

வெள்ளிக் குழைத்துணி போலுங் கபாலத்தன் வீழ்ந்திலங்கு
வெள்ளிப் புரியன்ன வெண்புரி நூலன் விரிசடைமேல்
வெள்ளித் தகடன்ன வெண்பிறை சூடிவெள் ளென்பணிந்து
வெள்ளிப் பொடிப்பவ ளப்புறம் பூசிய வேதியனே. —அப்பர்.

நமது சமாஜத்தின் வெள்ளிவிழா நிகழும் பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள் ௧௩, ௧௪-ந் தேதிகளில் (29, 30-8-1930) கிழக்கு மருதூரில் கூடும். "நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும், தாகூர் சட்ட விரிவுரையாளர் - திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களும் (M. A., M. L.,) முறையே முதல் நாள் இரண்டாம் நாள் தலைமை வகிப்பார்கள். திருவாளர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் (B. A. L. T.) முதலிய அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், பி. எ., பி. எல்.
காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

குறிப்பு :—கிழக்குமருதூர் வர, பண்ருட்டி ஸ்டேஷனில் இறங்கி, வாடகை மோட்டாரில் மலட்டாறு பாலத்தின் வடகரையி லிறங்க வேண்டும்.

## அப்பர் தேவாரம்

ஏககாலத்தில் 10 புத்தகங்கள் வாங்குவோருக்கு ஒரு புத்தகம் அதிகமாகக் கொடுக்கப்படும். 50 புத்தகங்கள் வாங்குவோருக்கு ரூபாய் ஒன்றுக்கு இரண்டணா வீதம் கழிவு தரப்படும்.

தபாற் செலவு முதலியன வேறு.

## சுந்தரர் தேவாரம்

ஒரே காலத்தில் 5 புத்தகங்கள் வாங்குவோருக்கு ஒரு புத்தகம் அதிகமாகக் கொடுக்கப்படும். தபாற் செலவு முதலியன வேறு.

ஷை நூல்கள் 1930௵ ஆகஸ்டு௴ 10௳ முதல் செப்டம்பர்௴ 15௳ வரையில் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசங்கள் :—

ருக்மணி குக்கர் கம்பனி,
இராயபுரம், சென்னை.

முருகவேள் புத்தகசாலை,
இராயபேட்டை, சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.